முதுகலைமாணி:2011-2012
இஸ்லாமிய நாகரீகத்தின் வளர்ச்சி: isc-603

# தப்ஸீர்கலையின் தோற்றம், வளர்ச்சி பற்றி விரிவாகக்கூறி, சமகாலத்தில் அல்குர்ஆன் விளக்கவுரை எவ்வாறு அமையப் பெறவேண்டும் என்பதற்கான உமது கருத்துக்களையும் தெளிவுபடுத்துக

மாணவர் பெயர் : எம். ஜே. எம். ரிஸ்வான்

பதிவு இலக்கம்: HD/ MA/ 08-09-/559

விரிவுரையாளர்: எம்.ஏ.எம். யஸீர் (M,PHIL)

(அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

# முன்னுரை

ஆரம்ப இஸ்லாமியக் காலப்பகுதியில் ஒரு இஸ்லாமிய அமைப்பு, ஒரு சமூகம் , ஒரு கோட்பாடு என்ற நிலைதான் காணப்பட்டது. முஸ்லிம்கள் மத்தியில் பாரிய பிளவுகள் காணப்படவில்லை. சாதாரண ∴பிக்ஹ் மஸாயில்களில் கூட கருத்துமுரண்பாடுகள் மிகக்குறைவானதாகவே காணப்பட்டுத. அப்படியிருக்க அகீதா சார்ந்த அம்சங்களில் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டிருக்கவே முடியாது என்பதே உண்மை.

ஆரம்ப கால நூற்றாண்டில் வாழ்ந்த ஸஹாபாக்கள், தாபியீன்கள், அவர்களின் வழிவந்த மாணவர்களிடம் அல்குர்ஆனுக்கு தவறான கருத்துக்களை கூறும் வழிமுறை இருக்கவில்லை.
இஸ்லாமிய மார்க்கம் எப்போது அதன் கோட்பாடுகளுக்கு மாற்றமான சிந்தனையாளர்களை முகம்கொடுத்ததோ, எப்போது சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற்றதோ அப்போதிருந்தே அல்குர்ஆனைத் தவறாகப்புரிந்தும், விளங்கியும் விளக்கம் தரும் குழுக்களைச் சந்தித்தது.
நபியே நீர் அவர்களின் செல்வத்தில் இருந்து ஸகாத்தை எடுப்பீராக, மேலும் அவர்களுக்காகப் பிரார்திப்பீராக என்ற அல்குர்ஆனிய வசனத்தை முதலாம் கலீ∴பா அபூபக்கர் (ரழி) அவர்களின் ஆட்சியில் ஸகாத் தரமறுதுத்தோர் சுட்டிக்காட்டிய விளக்கத்தையும், உமர் (ரழி) அவர்களின் காலத்தில் குதாமா (ரழி) அவர்கள் மது அருந்திய பின்னர் தான் குடித்தற்குரிய ஆதாரம் குர்ஆனில் இருக்கின்ற என்று கூறியதையும், அல்ஹுக்ம் என்ற சொல்லுக்கு கவாரிஜ்கள் தந்த விளக்கத்தையும் இன்னும் பல சான்றுகளையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

இஸ்லாமிய சிந்னைக்கு நேர்மாற்றமான குழுக்கள் அல்குர்ஆன் வசனங்களுக்கும், ஹதீஸுக்கும் தமது பிழையான சித்தாந்தங்களுக்கு இசைவான பொருள்களைத் தந்தார்களே அன்றி அல்குர்ஆன் வேண்டி நிற்கும் சரியான பொருள்களை விளக்கிட முன்வரவில்லை என்பதே உண்மை.

ஹிஜ்ரி பதின்நான்காம் நூற்றாண்டுவரை அறிஞர்களால் எழுதப்பட்ட த∴ப்ஸீர்களைப் பாரக்கின்ற போது பொதுவாக பாத்திலான சித்தாந்தங்களுக்கு மறுப்புக் கூறும் வகையிலும், துறைகள் சார்ந்த அம்சங்களை விளக்குவதையும் அவைகள் முன்னிலைப்படுத்தி இருப்பதை அவதானிக்க முடிகின்றது.
மொழி, கலைச் சொற்கள், தெளிவில்லாத வசனங்களை விளக்குதல், சட்டங்களை விளக்குதல் போன்ற துறை சார்ந்த அம்சங்கள் ஒரு அறிஞரின் நூலில் குவிந்து காணப்பட்டிருப்பதைப் பாரக்கின்றோம்.

அத்தோடு இஸ்லாத்தின் தோற்றம் பெற்ற வழிகெட்ட சிந்தனைப்பிரிவுகளின் ஆதாரங்களை முறியடிப்பதும் அந்த த∴ப்ஸீர்களில் காணப்பட்ட முக்கிய போக்காகும். அல்குர்ஆனிய வசனங்களை திரித்து, தவறாக விளக்கிய மு∴தஸிலாக்கள், ஜஹ்மிய்யாக்கள், கவாரிஜ்கள், ஷீஆக்கள் மற்றும் சூ∴பிக்கள் போன்றோரின் த∴ப்ரில் காணப்படும் முரண்பாடுகளை விளக்குவதும் அவற்றிற்கு மறுபப்புக் கூறுவதும் ஒரு வழிமுறையாகக் கொள்ளப்பட்டது.

அறிவியல் வளர்ச்சியடைந்ததோடு முஸ்லிம் அறிஞர்களின் பார்வையிலும் அல்குர்ஆனின் விளக்கத்தில் மாற்றம் தென்பட ஆரம்பித்தது. உதாரணமாக ஆரம்ப காலத்தில் **"அலக்"** என்ற அரபுச் சொல்லை மொழிமாற்றம் செய்த அறிஞர்கள் இரத்தக்கட்டி என்று மொழிமாற்றம் செய்தார்கள்.

அதே நேரத்தில் அறிவியல் விஞ்ஞான உண்மைகளுக்கு அல்குர்ஆன் என்றும் முரண்படுவதில்லை என்பதை நரூபிப்பதற்காக அலக் என்பது கருவறைச் சுவரில் ஒட்டிக் கொண்டிருக்கும் அட்டைப்பூச்சி போன்ற ஒன்று, அல்லது அலக் என்ற நிலை என விளக்கம் தந்தார்கள்.

எனினும், ஆரம்ப காலத்தில் விளக்கம் தந்த அறிஞர்கள் இக்கருத்தை அங்கீகரிக்கும் விதத்தில் தமது கருத்துக்களை சூசகமாகத் தந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

அல்குர்ஆனிய அறிஞர்களில் சிலர் அல்குர்ஆனில் இடம் பெறும் சட்ட வசனங்களை தனியாகப் பிரித்து விளக்க முற்பட்டதன் விளைவாக நவீன காலத்தின் இஸ்லாமிய சட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரத்திற்கு பதிலடிகொடுப்பதற்கு அவை உந்து சக்தியாக விளங்கியதை மறுக்க முடியாது.

அவ்வாறே இஸ்லாமிய பொருளியில், வங்கியியல், மருத்துவம், வானியல், போன்ற துறைகளுடன் ஒட்டியதாக அல்குர்ஆனின் வசனங்களை விளக்குவதில் அறிஞர்கள் பாரிய பங்களிப்புச் செய்துள்ளனர். காலத்தின் முன்னேற்றம் அறிஞர்களின் அறிவியல் பார்வையிலும் முன்னேற்றத்தை உருவாக்கியது எனச் சுருக்கமாகக் குறிப்பிட முடியும். அறிவியல் துறை சார்ந்த விளக்கங்களை உள்ளடக்கி பல த.ஃப்ஸீர்கள் முஸ்லிம் உலகில் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

**"த.ஃப்ஸீர் கலையின் தோற்றம், வளர்ச்சி பற்றி விரிவாகக் கூறி, சமகாலத்தில் அல்குர்ஆ விளக்கவுரை எவ்வாறு அமையப்பெற வேண்டும் என்பற்கான உமது கருத்துக்களையும் தெளிவுபடுத்துக"** என்ற தலைப்பின் ஊடாக பின்வரும் தலைப்புக்களில் இங்கு பேசப்படுகின்றது.
இதில் காணப்படும் நிறைகளுக்கு அல்லாஹ் அருள் செய்யவும் குறைகளை மன்னிக்கவும் பிரார்த்தனை செய்கின்றேன். இவ்வாய்வு அமையப் பெற்றுள்ள தலைப்புக்கள் பின்வருமாறு

- தப்.ஃஸீர் என்பதன் சொல், மற்றும் அகராதிப் பொருள் விளக்கம்
- த.ஃப்ஸீரின் கலையின் தோற்றம்
- த.ஃப்ஸீரின் பக்கமான தேவை
- த.ஃப்ஸீர் துறையின் முக்கிய மூன்று கால கட்டங்கள், அவற்றில் காணப்படும் சிறப்பபியல்புகள்
- த.ஃப்ஸீரின் மூலாதார அடிப்படைகள்
- த.ஃப்ஸீர் செய்யப்பட வேண்டிய முறைகள்
- நபித்தோழர்களின் த.ஃப்ஸீரின் பக்கமான தேவைகள், காரணிகள்
- த.ஃப்ஸீரின் பிரதான வகைகள், அவற்றில் காணப்படும் சாதக பாதங்கள்.
- அல்குர்ஆனை விளக்குவோரிடம் காணப்பட வேண்டிய அடிப்படை அறிவுகள்
- த.ஃப்ஸீர் துறையில் முக்கிய சில முன்னோடிகள்

- ஆரம்பகால, நவீனகால த.:.ப்ஸீர்கள். நவீன காலத்தில் த.:.ப்ஸீர் அமையப் பெறவேண்டி வழிமுறைகள்
- நவீன அறிவியலைக் கொண்டு எழுதப்பட்ட த.:.ப்ஸீர்கள் போன்ற முக்கிய தலைப்புக்களில் இது அணுகப்பட்டுள்ளது

அல்லாஹ் இஸ்லாமிய அறிஞர் பெருமக்களுக்கு வழங்கியிருந்த அறிவுஞானத்தையும், அவர்களின் பணிகளையும், அற்பணிப்பையும் ஒப்பிட்டு நோக்கின்ற போது நமது இந்த முயற்சியும், பணியும் அற்பமானதாகும்.

அரபு அறிவில் புலமை அற்ற நமது இம்முயற்சியில் அல்லாஹ் அபிவிருத்தியும், பரகத்தும் செய்வானாக என்றும், எமது கல்விக்காக உழைத்த கல்விமான்கள், விரிவுரையாளர்களின் வாழ்வில் அருட்பாக்கியங்களை நிரப்பமாகத் தருவானாக என்றும் பிரார்த்தனை செய்தவனாக!

**இவ்வண்ணம்:**

***எம்.ஜே.எம். ரிஸ்வான்***

***பதிவு இலக்கம்:*** HD/ Ma/ 08-09-/559

### த.ஃப்ஸீர் என்பதன் சொல் மற்றும் அகராதிப் பொருள் விளக்கம்:

மொழி வழக்கில் தெளிவு, மயக்கமற்ற நிலை என்ற பொருள்படும் சொல்லாக விளங்குகின்றது. அல்.ஃபுர்ஆன் அத்தியாயம்:33வது வசனத்தில்:

{وَلاَ يَأْتُونَكَ بِمَثَلٍ إِلاَّ جِئْنَاكَ بِالْحَقِّ وَأَحْسَنَ تَفْسِيراً} (الفرقان: 33)

**(நபியே!) அவர்கள் உம்மிடம் எந்த உதாரணத்தை கொண்டுவந்தாலும் நாம் உம்மிடம் சத்தியத்தையும், (அதைவிட) தெளிவான விளக்கத்தையும் கொண்டுவருவோம்** (அல்.ஃபுர்கான்: **வசகனம்:** 33) என இடம் பெறும் வசனத்தில் وَأَحْسَنَ تَفْسِيراً த.ஃப்ஸீரா என்ற சொல் தெளிவான விளக்கம் என்ற பொருளில் இடம் பெற்றுள்ளதைக் கவனத்தில் கொண்டு த.ஃப்ஸீர் என்பது தெளிவான விளக்கம் எனக்குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சொல்லை விளக்குகின்ற அகராதி அறிஞர்கள்: அது ஃபஸ்ர் என்ற சொல்லில் இருந்து பிறந்ததாகவும், அது தெளிவையும், மூடிக்கிடப்பதை அகற்றி வெளிச்சம் தரும் பொருளையும் கொண்டது என விளக்குகின்றனர்.

மேற்படி வசனத்தை விளக்குகின்ற த.ஃப்ஸீர் துறை அறிஞர்கள்:

{وَلاَ يَأْتُونَكَ بِمَثَلٍ إِلاَّ جِئْنَاكَ بِالْحَقِّ وَأَحْسَنَ تَفْسِيراً} .. أى بياناً وتفصيلاً، وهو مأخوذ من الفسر وهو الإبانة والكشف

தெளிவான, விரிவான விளக்கத்தைக் கொண்டு வருவோம். அது- தெளிவு, விவரணம், (சந்தேமற்ற நிலை) போன்ற பொருளைத்தரும் ஃபஸ்ர் எனப்படும் மூலச் சொல்லில் இருந்து பெறப்பட்டது என விளக்குகின்றனர்.(1)

## இஸ்லாமிய கலைச் சொல் வழக்கில் த.ஃப்ஸீர்

இதனை விரிவான பொருள் கொண்டு நோக்குகின்றனர். இது தொடர்பாக ஒவ்வொரு அறிஞர்களும் தமது அல்குர்ஆனிய கலையின் அனுபவத்தின் அடிப்படையில் தமது கருத்துக்களை முன்வைக்கின்றனர். அது பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

**وعرَّفه الزركشى بأنه: "علم يُفهم به كتاب الله المُنَزَّل على نبيه محمد صلى الله عليه وسلم وبيان معانيه، واستخراج أحكامه وحكمه." (2)**

அல்லாஹ்வின் தூதராகிய முஹம்மத் நபியின் மீது இறக்கப்பட்ட அல்லாஹ்வின் வேதம் பற்றிய அறிவையும், அதன் பொருள்களை விளக்குவதை, அதன் சட்டங்களையும், நுட்பங்களையும் வெளிக்கொணர்வதையும் குறிக்கும். இதற்கு அரபு இலக்கண, இலக்கிய கலையறிவு, மற்றும் குர்ஆனியக் கலையுடன் தொடர்பான கலைகள் பெறப்படும்.

———————————————

**1- التفسير والمفسرون - د. محمد حسين الذهبى - (1 / 5 ) (من المكتبة الشاملة)**

**2- الزركشي : البرهان في علوم القرآن - (1 / 13) (من المكتبة الشاملة )**

**أن علم التفسير علم يبحث عن مراد الله تعالى بقدر الطاقة البَشرية، فهو شامل لكل ما يتوقف عليه فهم المعنى، وبيان المراد (1)**

***மனித சக்திக்கு ஏற்ப (குர்ஆன் கூறரும்) அல்லாஹ்வின் நாட்டம் பற்றி ஆராய்ந்திடும் கலையாகும். அது கருத்தை விளங்கி, நோக்கத்தை தெளிவுபடுத்துவதன் மீது*** **தங்கி இருக்கும் அனைத்தையும் உள்ளடக்கிக் கொள்ளும் என விளக்கம் தரப்படுகின்றது.** (1)

அப்படிப்பார்க்கின்ற போது இறைமறையில் மறைந்தும், புதைந்தும் கிடக்கும் அற்புதங்களை அதன் கருத்துக்களைச் சிதைக்காது, இறைநோக்கத்தை நிறைவேற்றும் விதமாக தேவையான கோணங்களில் விளக்குவதைக் த.ஃ.ப்ஸீர் எனக் குறிப்பிட முடியும். (அல்லாஹ்வே மிக அறிந்தவன்).

த.ஃ.ப்ஸீர் என்ற சொல்லைக் குறிக்க த.ஃ.வீல் التأويل என்ற சொற்பிரயோகத்தை அறிஞர்கள் பாவித்துள்ளனர். அது பற்றியும் சுருக்கம் தரப்படுகின்றது.

**அரபு மொழிவழக்கில் தி**ரும்புதல், **الرجوع والعود** விளக்கம் அளித்தல், கனவுக்கு விளக்கம் تفسير الرؤيا தருதல் போன்ற பொருள்களை التفسير என்ற சொல் குறிப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒரு சான்றின் நேரடியான பொருளை விட்டுவிட்டு தவறான விளக்கத்தை அளிப்பதையும் த.ஃ.வீல் **التأويل** **என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.**

**التأويل في كتاب الله وسنة رسوله –صلى الله عليه وسلم– هو الحقيقة التي يؤول إليه الكلام ، فتأويل الخبر هو عين المخبر به ، وتأويل الأمر: نفس الفعل المأمور به" (2)**

**அல்லாஹ்வின் வேத்திலும், அவனது தூதரின் சுன்னாவிலும் த.ஃ.வீல் என்பது ஒரு பேச்சின் யதார்த்தத்தில் தங்கி நிற்பதையும், அதில் ஏவப்பட்டுள்ளதை அப்படியே நடைமுறைப்படுத்துவதையும் குறிக்கும் என அபுல் இஸ் அல்ஹன.ஃபி என்ற அறிஞர் சுட்டிக்காட்டுகின்றார்.** (2)

பிற்காலத்தில் வந்தவர்கள் த.ஃ.வீல் **التأويل** என்ற சொல்லை தவறாக அணுகினர். அவர்கள் **ஊர்ஜிதமான கருத்தில் இருந்து ஊர்ஜிதம் அற்ற பலவீனமாக கருத்திற்காக அதனை உபயோகித்தனர். இது அகீதாவில் வழிதவறியவர்களிடம் காணப்பட்ட அணுகுமுறையாக இருந்துள்ளது. அது இன்றும் பலரிடம் காணப்படுகின்றது. (2)** இது வழிகெட்டபிரிவினரின் அணுகுமுறையாகும்.

-----------------

–1– التفسير والمفسرون – د. محمد حسين الذهبى – (1 / 5 ) (من المكتبة الشاملة)

–2– شرح الطحاوية – ط دار السلام – (1 / 213)

## த∴ப்ஸீரின் பக்கமான தேவை

அரபு மொழியில் இறக்கப்பட்ட அல்குர்ஆனை தமது மொழியாகக் கொண்ட மக்கள் விளங்குவதில் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ள்ளனர். முஸ்லிம் சமூகம் அறிந்திருக்க வேண்டிய அறிவுகளில் குர்ஆனிய அறிவு முதல் இடத்தைப் பெறுகின்றது. குர்ஆனைப்பாதுகாப்பது, அதன் பொருள்கள் பற்றி சிந்தனை செய்வது, அதனை விளங்குவது போன்ற அம்சங்களை அல்லாஹ் இந்த உம்மத்தின் மீது விதியாக்கியுள்ளதாகும்.

கொள்கை சார்ந்த அம்சங்களில் வழி வழிதவறியவர்கள் அல்குர்ஆனை அஜமிகள் பார்வையில் விளங்க முற்பட்டது காரணமாகும். இதற்கு பல சான்றுகள் முன்னுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

{أَفَلا يَتَدَبَّرُونَ الْقُرْآنَ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللَّهِ لَوَجَدُوا فِيهِ اخْتِلافًا كَثِيرًا} *அவர்கள் இந்தக்குர்ஆனை சிந்திக்க வேண்டாமா? அது அல்லாஹ் அல்லாவர்களிடம் இருந்து வந்திருக்குமாக இருந்தால் அதில் அவர்கள் பலமுரண்பாடுகளைக்கண்டிருப்பார்கள். (1)*

{كِتَابٌ أَنْزَلْنَاهُ إِلَيْكَ مُبَارَكٌ لِيَدَّبَّرُوا آيَاتِهِ وَلِيَتَذَكَّرَ أُولُو الْأَلْبَابِ} *இது அருள்பாக்கியமிக்க வேதம். அதன் வசனங்களை அவர்கள் சிந்திப்பதற்காகவும், சிந்தனையுள்ளோர் நல்லுபதேசம் பெறும்பொருட்டும் நாம் உம்மளவில் அதை இறக்கி வைத்துள்ளோம். (2)*

{أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْآنَ أَمْ عَلَى قُلُوبٍ أَقْفَالُهَا} *அவர்கள் இந்தக்குர்ஆனை சிந்திக்க வேண்டாமா? அல்லது அவர்களின் இதயங்களில் பூட்டுக்கள் (போடப்பட்டு) இருக்கின்றனவா?*

இவ்வாறான வசனங்கள் இறைமறையை சிந்திக்கும்படி சமுதாயத்தை அழைக்கின்றது. இது அனைவராலும் சாத்தியமானதா என்றால் போரைப்போன்று அனைவருக்கும் சாத்தியமற்றதாகும். யாரிடம் அறிவும், ஆற்றலும், மார்க்க விளக்கமும் இருக்கின்றதோ அவர்கள் மீது இந்தப் பணி கடமையாகும்.

அல்குர்ஆன் தெளிவான அரபி மொழியில் இறங்கி இருந்தும், அது இறக்கப்பட்ட சமூகம் தெளிவான அரபுமொழி பேசும் ஆற்றல் உடையவர்களாக இருந்தும் சிலபோது அவர்களுக்கும் சில வசனங்களை விளங்குவதில் சிக்கல்கள் எழுந்ததுண்டு. அதற்கான தீர்வினை அல்லாஹ்வின் தூதரிடம் நேரடியாகச் சென்று பெற்றுக் கொண்டார்கள். அவற்றிற்கான தெளிவு அல்லாஹ்வின் தூதரால் தரப்பட்ட பின்னர் அவர்கள் தெளிவு பெற்றார்கள். இதற்கு ஏராளமான சான்றுகள் காணப்படுகின்றன.

நபி (ஸல்) அவர்கள் உயிருடன் வாழ்கின்ற போது அதனைத் தெளிவுபடுத்தும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நபியே! மனிதரக்ளுக்கு இறக்கப்பட்ட இவ்வேதத்தை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்திடவும், அவர்கள் நல்லுபதேசம் பெறும் பொருட்டும் உம்மீது இவ்வேதத்தை நாம் இறக்கி வைத்தோம் என்பது அல்குர்ஆனின் அறிவுரையாகும்

இந்த வசனத்தின் அடிப்படையில் நபியிடம் விளக்கம் பெற்ற நபித்தோழர்கள் அதனை மனனம் செய்து கொண்டனர், தமது வாழ்வில் நடைமுறைப்படுத்தினர். பத்து வசனத்தைக் கற்றுக் கொண்டால் அவற்றை நடைமுறைப்படுத்தாது, அடுத்த வசனங்கள் பக்கம் செல்வதில்லை என்ற நிலைப்பாட்டில் வாழ்ந்தார்கள்.

---

1- النساء : رقم الآية : 82

2- [ص : 29]

3- [محمد : 24]

தெளிவான அரபுமொழியைக் கொண்டிருந்த நபித்தோழர்களுக்கு அனைத்து வசனங்களையும் விளக்க வேண்டிய தேவை காணப்படவில்லை. குர்ஆனில் நேரடியாக விளங்கியதைக் கொண்டு அவர்கள் செயல்பட்டார்கள்.

அவர்களுக்குப் பின் இஸ்லாத்தில் இணைந்த மக்கள் அரபி அறிவில் புலமை அற்றவர்களாக விளங்கினார்கள்.

கருத்து முரண்பாடுகள் ஆரம்ப காலத்தை விட பிற்காலத்தில்தான் அதிகம் தோன்றின. அதுவும் அரபுக்கள் அல்லாத மக்கள் வேறு வேறு கலாச்சாரத்தின் தாக்கத்துடன் இம்மார்க்கத்தை ஏற்றனர். அவர்களிடம் காணப்பட்ட குர்ஆன் பற்றிய அறியாமை குர்ஆனியக் கலையில் கூறப்படுகின்ற சகல பகுதிகளும் விரிவாகக் கூறப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த தேவையும் த.ஃப்ஸீரின் தேவையினை உறுதி செய்கின்றது.

அல்குர்ஆனிய விளக்கத்தில் நபித்தோழர்கள் ஏற்றத்தாழ்வை உடையவர்களாக இருந்தனர். ஒருவர் மற்றவரை விட ஏற்றத்தாழ்வுடன் காணப்படுவது ஒரு சமூகத்தின் இயல்பாகும். அதில் நபித்தோழர்களும் விதிவிலக்கானவர்கள் அல்லர்.

இருப்பினும், அரபி மொழியாற்றல் என்பது குர்ஆனை விளங்கிடப் போதுமான தகமை அல்ல என்பதை நபித்தோழர்கள் வாழ்வில் ஏற்பட்ட குர்ஆன் பற்றிய தவறான புரிதல்கள் பற்றி வந்துள்ள பல நிகழ்வுகள் மூலம் அறிய முடிகின்றது. நபித்தோழர்கள் அனைவரும் குர்ஆனிய வல்லுனர்களாக அறிமுகப்படுத்தப்படாதிருப்பது இதனை இன்னும் உறுதி செய்கின்றது.

## த.ஃப்ஸீர் கலையின் தோற்றம்

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கிய குர்ஆன் வசனங்கள் நபித்தோழர்கள் மத்தியில் ஓதிக்காண்பிக்கப்பட்டன. அவற்றை அவர்கள் நேரடியாகவே புரிந்து கொண்டார்கள். அவர்கள் தமக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டு அறிந்து கொள்வார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் பதில் அளிப்பதைக் கொண்டு அதை நிவர்த்தி செய்து கொள்வார்கள்.

சில போது தாம் இந்த வசனத்தை இப்படித்தான் விளங்கினோம், நடைமுறைப்படுத்தினோம் என நபி (ஸல்) அவர்களிடம் எடுத்துக் கூறுகின்ற போது அவர்களின் தவறுதலான புரிதலை நபி (ஸல்) அவர்கள் திருத்தி கொடுப்பார்கள், அல்லது விளக்கம் கேட்டதற்கு விளக்கமளிப்பார்கள். இதை ஒருவர் மற்றவரிடம் கூறி மனப்பதிவு செய்து கொள்வார்கள். பின்வரும் செய்திகளை இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம்.

عَنْ عَائِشَةَ قَالَتْ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ لَا يَذْهَبُ اللَّيْلُ وَالنَّهَارُ حَتَّى تُعْبَدَ اللَّاتُ وَالْعُزَّى فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ إِنْ كُنْتُ لَأَظُنُّ حِينَ أَنْزَلَ اللَّهُ{ هُوَ الَّذِي أَرْسَلَ رَسُولَهُ بِالْهُدَى وَدِينِ الْحَقِّ لِيُظْهِرَهُ عَلَى الدِّينِ كُلِّهِ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُونَ } أَنَّ ذَلِكَ تَامًّا قَالَ إِنَّهُ سَيَكُونُ مِنْ ذَلِكَ مَا شَاءَ اللَّهُ ثُمَّ يَبْعَثُ اللَّهُ رِيحًا طَيِّبَةً فَتَوَفَّى كُلَّ مَنْ فِي قَلْبِهِ مِثْقَالُ حَبَّةِ خَرْدَلٍ مِنْ إِيمَانٍ فَيَبْقَى مَنْ لَا خَيْرَ فِيهِ فَيَرْجِعُونَ إِلَى دِينِ آبَائِهِمْ صحيح مسلم

லாத்து, உஸ்ஸா (குரைஷயரின் வழிபாட்டுச் சிலைகளின் பெயர்) மீண்டும் வணங்கப்படாத வரை இரவு பகல் இல்லாதொழிக்கப்படாது (மறுமை நிகழாது) என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய போது அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் ‘ அவன்தான் தன்தூதரை நேர்வழியைக்

கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பினான். அதை பிறமதங்கள் அனைத்தையும் விட மேலோங்கச் செய்வதற்காக, நிராகரிப்பாளர்கள் வெறுத்த போதிலும் சரியே என்ற இறைமறை வசனம் இறங்கிய போது அதை நான் பரிபூரணமானதாகவே எண்ணிக்கொண்டேன் எனக் கூறியபோது "அல்லாஹ் நாடிய அளவு அது இருக்கும். பின்னர் அல்லாஹ் மணமான ஒரு காற்றை அனுப்புவான். எவரது இதயத்தில் ஈமானில் கடுகுப் பிரமாண அளவு இருக்கின்றதோ அவர்கள் அனைவரும் அதனால் மரணத்தை தழுவார்கள். நன்மை இல்லாத மனிதர்கள்தாம் மிஞ்சுவார்கள். பின்னர் அவர்கள் தமது மூதாதையரின் மார்க்கத்திற்கு மீண்டும் திரும்பிச் சென்றுவிடுவார்கள் என விளக்கமளித்தார்கள். (முஸ்லிம்) (1) இது நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ் அல்குர்ஆன் வசனத்திற்கு முரண்படுகின்றது போன்றதாக உணரப்பட்ட சந்தேகத்துக்கான பதிலாக இருக்கின்றது.

தயம்மும் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்ற வசனத்தை தவறாகப் புரிந்த அம்மார் பின் யாசிர் (ரழி) என்ற நபித்தோழருக்கு தவறைத்திருத்தி இவ்வாறுதான் இதன் அமைப்பு என விளக்கியதையும் மற்றொரு சான்றாகக் கொள்ள முடியும்.

தண்ணீர் இல்லாத போது தூய்மையான மண்ணை நாடுங்கள் என்ற வசனத்தை மண்ணில் புரள்வது என்று விளங்கிய அம்மார் (ரழி) ஒரு பிராணி மண்ணில் புரள்வது போன்று புரண்டார். அதையே அவர் தயம்மும் என்றும் கருதினார். இது பற்றி நபிகள் நாயகத்திடம் எடுத்துக் கூறிய போது நீர இவ்வாறு செய்வது போதும் எனக் கூறி தனது இரு கரத்தையும் மண்ணில் அடித்து, பின்னர் தனது முகத்தையும், இரு மணிக்கட்டுக்களையும் தடவிக்காட்டி தயம்மும் பற்றி விளக்கினார்கள். (புகாரி). (2) இது தவறாகப் புரிந்த ஒரு செய்திக்கு விளக்கமளித்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது.

நபிகள் நாயகத்தின் காலத்தில் காலத்தில் த.்.ப்ஸீர் நூல்வடிவத்தில் தொகுப்பாக காணப்படவில்லை. நபித்தோழர்கள் தாம் செவிமடுத்ததையும், நபியிடம் இருந்து கற்றுக் கொண்டதையும் மற்றவர்களுக்கு அறிவித்தார்கள். அதை மக்கள் தமது மனங்களில் பதிவு செய்து கொண்டனர். இதை அஸ்ருர்ரிவாயா என்று குறிப்பிடுவர்.

அவர்களின் பின்னர் தாபியீன்களின் ஆரம்ப காலத்திலும் இவ்வாறானதொரு நடைமுறைதான் இருந்து வந்தது. ஹிஜ்ரி முதலாவது நூற்றாண்டின் இறுதியில் உமைய்யாக் கலீ.்.பாக்களில் ஒருவரான கலீ.்.பா உமர் பின் அப்தில் அஸீஸ் (ரஹ்) அவர்கள் தனது ஆட்சியில் விடுத்த பணிப்புரையின் பேரில் ஹதீஸ் தொகுக்கப்பட்டது. அத்துடன் த.்.ப்ஸீரும் அதன் பல தரப்பட்ட விடங்கள் ஹதீஸ்களுடன் இணைந்து தொகுக்கப்பட்டது. இதை புகாரி, முஸ்லிம், சுனன் கிரந்தங்களில் காணமுடியும். இதனை ஹதீஸ்களுடன் இணைந்து காணப்பட்ட காலம் எனக் குறிப்பிட முடியும்.

நபி (ஸல்) அவர்களின் விளக்கங்கள், ஸஹாபாக்கள், தாபியீன்களின் கூற்றுக்கள் உள்ளடங்கியதாக் காணப்பட்ட தனியான தொகுப்பாக்க காலம். இத்தொகுப்புக்கள் அறிவிப்பாளர்கள் இணைந்தே காணப்பட்டது. பின்னர் அறிவிப்பாளர்கள் வரிசசைகளைச் சுருக்கி அறிவித்தகாலம்.

இந்த நிலை ஹி:180 வரை நீடித்துள்ளது என்பதை த.்.ப்ஸீர் தொகுப்புக்காலம் பற்றிய தகவல்கள் மூலம் அறிந்து கொள்கின்றோம்.

---

1- **ஆதார நூல்:** (முஸ்லிம்- ஹதீஸ் எண்: 5174) பாடம்: **லாத்து, உஸ்ஸா மீண்டும் வணங்கப்படாதவரை வரை மறுமை நிகழாது.**

2- புகாரி. அத்தியாயம்: தயம்மும்

3- http://www.alukah.net/Sharia/0/352/#ixzz2HunMZyYd

## த.ஃ.ப்ஸீர் கலையின் முக்கிய மூன்று கால கட்டங்கள்

த.ஃ.ப்ஸீர் துறை முக்கிய மூன்று கால கட்டங்களைக் கடந்து பயணித்துள்ளதாக அந்த துறை சார்ந்த ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது

**முதலாவது காலப் பகுதி:** இக்காலப்பகுதியில், ஹதீஸுடன் இணைந்திருந்திருந்த காலம். இதை புகாரி, முஸ்லிம் போன்ற ஹதீஸ் கிரந்தங்களில் தனியான அத்தியாயமாக இடம் பெறச் செய்துள்ளனர். இக்காலத்தில் தனியான தொகுப்புக்கள் வெளிவரவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. இக்காலத்தில் த.ஃ.ப்ஸீரை தொகுத்தளித்தவர்களாக பின்வரும் அறிஞர்கள் இடம் பெறுகின்றனர்.

1- يزيد بن هارون السلمي ( ت : 117هـ. )

2- شعبة بن الحجاج ( ت : 160 هـ . )

3- وكيع بن الجراح ( ت : 197 هـ)

4- سفيان بن عيينة ( ت : 198. )

5- عبد الرزاق بن همام ( ت : 211هـ)

6- وآدم بن أبي إياس ( ت : 220 هـ)

7- وعيد بن حميد ( ت : 249هـ. )

## இக்கால த.ஃ.ப்ஸீரில் காணப்பட்ட சிறப்பம்சங்கள்.

1- **அறிவிப்பாளர் வரிசைக்கு முன்னுரிமை அளித்தல்.**
2- **நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கள் மற்றும், நபித்தோழர்கள், தாபியீன்களின் கூற்றுக்களை ஒன்றிணைத்தல்.**
3- ஹதீஸ் அத்தியாயங்களில் ஒரு அத்தியாயமாக த.ஃ.ப்ஸீரை இடம்பெறச் செய்தல். இக்காலத்தில், தனியான தொகுப்புக்கள் எதுவும் வெளிவரவில்லை.

## இரண்டாவது கால கட்டம்:

இக்கால கட்டத்தில் த.ஃ.ப்ஸீர் தனியான தொகுப்பில் நூல் வடிவில் வெளி வந்தது.

(140هـ :ت) عبد الملك بن جريج என்ற அறிஞரே த.ஃ.ப்ஸீர் தொகுப்பாக்கத்தில் முதலாவது அறிஞர் என அடையாளப்படுத்தப்படுகின்றார். அதற்குப் பின்னர்தான் பல த.ஃ.ப்ஸீர் நூல்கள் வெளிவந்ததாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தனியான தொகுப்பாக த.ஃ.ப்ஸீரை வெளியிட்டவர்களாக பின்வரும் அறிஞர்கள் இடம் பெறுகின்றனர்.

1- ابن ماجه ( ت : 273هـ ).

2- ابن جرير الطبري ( ت :310هـ ).

3- أبو بكر المنذري النيسابوري ( ت : 318 هـ )

4- ابن أبي حاتم (ت : 327 هـ )

5- ابن حبان (ت : 369 هـ )

6- والحاكم النيسابوري ( ت : 405 هـ)

7- وابن مردويه ( ت : 410 هـ )

## இக்கால த.்.ப்ஸீரில் காணப்படும் சிறப்பியல்புகள்

1- அல்குர்ஆனின் அத்தியாயங்களின் அமைப்பினைத் தழுவி, நபி (ஸல்) அவர்கள் ஹதீஸ், நபித்தோழர்களின் தீர்ப்புக்கள், தாபியீன்களின் கூற்றுக்களை ஆகியவைகளைத்தழுவி முழு அளவிலான த.்.ஸீர் செய்யப்பட்டமை.

2- அறிவிப்பின் நம்பகத்தன்மை பின்னால் வரும் சந்ததிகளின் கைகளில் விடப்பட்ட நிலையில் அறிவிப்பாளர் தராதரம் பற்றிய விஷயங்களில் கூடிய கவனம் செலுத்தாது பொதுவாக த.்.ப்ஸீருக்கான அறிவிப்பாளர் வரிசையை மாத்திரம் அந்த நூலில் பேணியமை.

3- இஸ்ராயீலிய்யாத் எனப்படும் வேதக்கார்கள் மூலமான செய்திகளை அறிவிப்பதில் எல்லையற்ற நிலை.

4- முன்னோர்களின் கூற்றுக்களை ஒன்றுதிரட்டி, அதனை வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படுத்தி, ஊர்ஜிதமான கருத்திற்காக முயன்றுள்ளமை.

5- அகழ்ந்தெடுக்கும் விளக்கத்தினை அறிவிப்புக்களுடன் இணைத்து விளக்கமுற்படுதல், மு.்.பஸ்ஸிரீன்களின் **திறமை- இஜ்திஹாத்-** எனப்படும் அகழ்ந்தெடுக்கும் முயற்சி வெளிப்படுதல் போன்ற அம்சங்கள். இது இப்னு ஜரீர் அத்தபரி (ரஹ்) அவர்களின் நூலில் பேணப்பட்டிருக்கின்றது.

## மூன்றாவது கால கட்டம்

**مرحلة اختصار الأسانيد والتوسع في التفسير** அறிவிப்பாளர் வரிசையை சுருக்கி, த.்.ப்ஸீரை விரிவாக்கம் செய்தல்

**وهي مرحلة اختصار الأسانيد والتوسع في التفسير ، وظهور المصنفات المتنوعة من حيث الاختصار والتوسع ، والمتباينة من حيث الاتجاهات والمناهج.**

இக்கால கட்டம் பற்றி வர்ணிக்கின்ற அறிஞர்கள்: அறிவிப்பாளர் வரிசைச் சுருக்கமும், த.்.ப்ஸீர் துறையில் விரிவான விளக்கமும் இடம் பெற்ற காலகட்டமும், தனியான த.்.ப்ஸீர் தொகுப்புக்கள் வெளிவந்த கட்டமுமாகும் எனக் குறிப்பிடுகின்றனர். இக்கால கட்டத்தில் உள்ள முறை இன்றுவரை நிலைத்து நீடித்து காணப்படுகின்றது. இக்கால த.்.ப்ஸீர் பல வடிவங்களைக் கொண்டதாக இருக்கின்றது.

---

1- مأخوذ من مقالات الدكتور: مساعد الطيار عن التفاسير من" موقع الشيخ مساعد الطيار"

## இக்கால த.ஃப்ஸீர்களில் காணப்படும் சாதக பாதகங்கள்:

1- இக்காலப் பகுதியில் பலர் த.ஃப்ஸீர் செய்தனர். அறிவிப்பளர் வரிசைகளை சுருக்கி, கூற்றுக்குரியவர்களை நீக்கினர். இதனால் ஸஹீஹ், ளயீ.ஃப் (பலவீனம்) இரண்டும் ஒன்றுடன் ஒன்று கலந்து காணப்படும் நிலை உருவானது. பலவீனமான, இட்டுக்கட்டப்பட்ட செய்திகளைக் கொண்டு த.ஃப்ஸீர நூல்கள் நிரம்பி வழிந்தன.

2- **அங்கீகரிக்க முடியுமான, புறம் தள்ள வேண்டிய கருத்துக்கள் இடம் பெற்றமை.**

இதனால் சான்றுகளைக் கொண்டு வழிதவறியோர், மற்றும் சிந்தனைப் பிரிவுகள் என அடையாளப்படுத்தப்படும் மு.ஃதஸிலா, ராபிழா(ஷீஆ), அஷ்அரிய்யா போன்ற பிரிவுகள் தமது கொள்கைக்கு இசைவாக வசனங்களின் விளக்கங்களை மாற்றி அமைத்து மக்களை வழிகெடுக்கும் நிலை உருவானது. இந்தப் போக்கை ஷமக்ஷரி தனது **கஷ்ஷா.ஃப் الكشاف** என்ற த.ஃப்ஸீரில் கடைப்பிடித்துள்ளார் என்பது நிரூபணமான உண்மையாகும்.

3- எவ்வித பயனையும் தேடித்தராத (வேதாக்கார்கள் வழிவந்த செய்திகள்) இஸ்ராயீலிய்யாத் பல பொய்யான செய்திகளில் மக்கள் அதிகளவு ஆர்வம் காட்டியமை. இதனால் அடிப்படையான மார்க்க அம்சங்களை விட்டுவிட்டு தேவையற்ற விஷயங்களில் தம்மைப் பராக்காக்கிக் கொண்டனர்.

4- த.ஃப்ஸீர் துறை அறிஞர்களின் ஈடுபாட்டை ஒத்ததாக த.ஃப்ஸீர்கள் செய்யப்பட்டமை.

ஒரு **மு.ஃபஸ்ஸிர்** பிக்ஹ் துறையில் அறிவுடையவராக இருப்பின் அவர் சட்டங்கள் சார்ந்த அம்சங்களில் அதிக கவனத்தை செலுத்தி இருப்பதைப் பாரக்கின்றோம். உதாரணமாக இப்னுல் அரபி அல்மாலிகி, குர்துபி, அல்ஜஸ்ஸாஸ் போன்ற அறிஞர்களின் நூல்களைக் குறிப்பிட முடியும். அவைகள் சட்டங்கள் சார்ந்தவையாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன.

5- ஒருவர் இலக்கணம் பற்றிய அறிவில் ஆழ்ந்த அறிவும் புலமையும் உள்ளவராக இருப்பின் அவர் இலக்கணத்தை முன்னிலைப்படுத்தியுள்ளார். சிலபோது அதிகம் பின்பற்றப்பட்டு வந்த ஓதல் முறையை தனது இலக்கண முறைக்கு தவறாக இருப்பதாகக் கூறி தள்ளுபடி செய்த துற்பாக்கிய நிலையும் இவர்களிடம் காணப்பட்டள்ளது.

உதாரணமாக, ஸஜ்ஜாஜ், அல்வாஹிதி, அபூஹய்யான் போன்றோரையும், தத்துவியளார்களின் கருத்துக்களால் தனது த.ஃப்ஸீரை நிரப்பிவைத்துள்ள பகுத்தறிவுவாதியான .ஃபஹ்ருர்ராஸி, இலக்கியத்துறையில் பேர்போன ஷமக்ஷரி போன்ற அறிஞர்களை சுட்டிக்காட்ட முடியும்.

இவர்களில் சரித்திரங்கள் கிஸ்ஸாகப்ஸாக்களை மாத்திரம் பதிவு செய்வோரும் இருந்தனர். உதாரணமாக த.ஃஹ்லபி. இவர் த.ஃப்ஸீர் செய்வதை விட புனைந்துரைக்கப்பட்ட பொய்யான கிஸ்ஸாக்களைக் கொண்டு தனது நூலை நிரப்பியுள்ளார் என்பதே ஆய்வாளர்களின் முடிவாகும்.

6- ஒரு வசனத்திற்கு பல விளக்கங்கள்.

## தொகுப்பாக்க காலத்தில் வெளிவந்த முக்கிய நூல்கள்

த.ஃப்ஸீர் நூல்வடிவில் இடம் பெற்ற காலத்தில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றை முழுமையாக மதிப்பீடு செய்வது என்பது கடிமாகும். இருந்தும் முக்கிய சில நூல்கள் இங்கு தரப்படுகின்றது. இவை த.ஃப்ஸீர் பி.ஃம.ஃஸுர் என்றும், த.ஃப்ஸீர் பிர்ர.ஃய், அல்அஹ்காம் என்றும் பிரிக்கப்பட்டுள்ளது.

**த.ஃப்ஸீர் ம.ஃதூர் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள். المؤلفات في التفسير بالمأثور:**

1- جامع البيان عن تأويل آي القرآن لمحمد بن جرير الطبري

2- بحر العلوم لأبي الليث السمرقندي

3- الكشف والبيان عن تفسير القرآن للثعلبي

4- معالم التنزيل للبغوي

5- المحرر الوجيز في تفسير الكتاب العزيز لابن عطيه

6- الجواهر الحسان في تفسير القرآن للثعالبي

7- تفسير القرآن العظيم لابن كثير

8- الدر المنثور في التفسير المأثور للسيوطي

9- فتح القدير للشوكاني

10- أضواء البيان في إيضاح القرآن بالقرآن للشنقيطي

**த.ஃப்ஸீர் பிர்ர.ஃய் அல்ஜாயிஸ் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள். المؤلفات في التفسير بالرأي الجائز:**

1- مفاتيح الغيب للفخر الرازي

2- أنوار التنزيل وأسرار التأويل للبيضاوي

3- مدارك التنزيل وحقائق التأويل للنسفي

4- لباب التأويل في معاني التنزيل للخازن

5- البحر المحيط لأبي حيان الأندلسي.

6- غرائب القرآن ورغائب الفرقان للنيسابوري

7- تفسير الجلالين لجلال الدين المحلي وجلال الدين السيوطي

8- السراج المنير في الإعانة على معرفة بعض معاني كلام ربنا الحكيم الخبير ، للخطيب الشربيني

9- رشاد العقل السليم إلى مزايا الكتاب الكريم لأبي السعود

10- . روح المعاني في تفسير القرآن العظيم والسبع المثاني للألوسي

11- تفسير المنار لمحمد رشيد رضا
12- في ظلال القرآن لسيد قطب
13- تيسير الكريم الرحمن في تفسير كلام المنان للسعدي
14- التحرير والتنوير لابن عاشور.

**சட்ட வசனங்களைக் கவனத்தில் கொண்டு எழுதப்பட்ட த.ஃ.ப்ஸீர் நூல்கள்.**

1- أحكام القرآن للجصاص الحنفي
2- أحكام القرآن للكيا الهراسي الشافعي.
3- . أحكام القرآن لابن العربي المالكي
4- الجامع لأحكام القرآن لأبي عبدالله القرطبي.
5- أحكام القرآن لابن عادل الحنبلي.
6- الثمرات اليانعة والأحكام الواضحة القاطعة ليوسف الثلائي الزيدي.

**புறம் தள்ளப்பட வெண்டிய கருத்துக்களைக் கொண்ட த.ஃ.பஸீர் நூல்கள்.**

**المؤلفات في التفسير بالرأي المذموم:**

1- الكشاف عن حقائق التنزيل وعيون الأقاويل في وجوه التأويل للزمخشري
2- ميان الزاد إلى دار المعاد لمحمد بن يوسف أطفيش.
3- حقائق التفسير لأبي عبد الرحمن السلمي.
4- تنزيه القرآن عن المطاعن للقاضي عبد الجبار المعتزلي
**5-** غرر الفوائد ودرر القلائد للشريف المرتضي على بن الطاهر أبي أحمد الحسين الشيعي .

## مصادر التفسير *தப்ஸீரின் மூலாதாரங்கள்.*

அல்லாஹ்வின் வேதத்திற்கு விளக்கம் தர முற்படும் மு.ஃ.பஸ்ஸிர் பின்வரும் அடிப்படைகளைத் தழுவி குர்ஆனுக்கான விளக்கத்தை பின்வரும் மூலாதாரங்கள் மூலம் த.ஃ.ப்ஸீர் செய்வது கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது.

1- அல்குர்ஆன்,

2- அஸ்ஸுன்னா,

3- நபித்தோழர்களின் தீர்ப்புக்கள்,

4- தாபியீன்கள், தபவுத்தாபியீன்களின் தீர்ப்புக்கள்,

5- மொழி அறிவு,

6- இஜ்திஹாத், ஆய்வின் அடிப்படையிலான முடிவு. இவை குர்ஆனிய விளக்கத்துறையில் முதன்மை மூலாதாரங்களாகக் கொள்ளப்படும்.

த.ஃ.ப்ஸீர் நூல்கள் மூலாதரங்கள் என்ற முடிவான சிந்தனைப் போக்கு ஒருவரிடம் வராமல் இருக்கவே இவை முதன்மை மூலாதார அம்சங்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

த.ஃ.ப்ஸீர் செய்ய முற்படும் மு.ஃ.பஸ்ஸிர் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, நபித்தோழர்களின் தீர்ப்புக்கள், தாபியீன்கள், தபவுத்தாபியீன்களின் தீர்ப்புக்கள் ஆகிய நான்கு அடிப்படைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தை இமாம் இப்னு தைமிய்யா (ம:ஹி:728) அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். மேற்படி வழிமுறைகளைطرق التفسير த.ஃ.ப்ஸீரின் வழிமுறைகள் என இமாம் அவர்களால் அழைக்கப்படுகின்றது. (1)

அதே வேளை, இமாம் பத்ருத்தீன் அஸ்ஸர்கஷி (ம: ஹி: 794) அவர்கள் அல்குர்ஆனிய விளக்கத்தில்:

1- நபிகள் நாயகத்தின் சொல், செயல், அங்கீகாரம் அடங்கிய அஸ்ஸுன்னா,

2- நபித்தோழர்களின் தீர்ப்புக்கள்,

3- அரபு மொழி,

4- சொற்பிரயோகம், அல்லது பேச்சின் பொருள் வேண்டிநிற்கும் பொருள் மூலமும், மார்க்கத்தின் வலுவின் மூலமும் பெறப்படும் விளக்கத்தினையும் அடிப்படையாகக் கொண்டு அமையபெறும் த.ஃ.ப்ஸீர் என்றும் வகைப்படுத்துகின்றார்கள். (2)

---

1- ابن تيمة مقدمة في أصول التفسير

2- د/ مساعد الطيار ، بحوث في التفسر ومناهجه ص 18 .

3- بحوث في التفسير لمساعد الطيار

4- محمد حسين الذهبي ، التفسير والمفسرون – (2 / 2)

## تفسير القرآن بالقرآن அல்குர்ஆனைக் கொண்டு அல்குர்ஆனை விளக்குதல்.

அல்குர்ஆன் மூலம் அல்குர்ஆனை விளக்குவது த.்.ப்ஸீர்துறையில் முதல்நிலை மூலாதாரமாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு வசனத்தின் பொருள் இறைவேதத்தில் ஒரு இடத்தில் மூடலாகவும், மற்றதொரு இடத்தில் அது தெளிவாகத் தெரிவது மிகப்பெரும் சிறப்பாகும். இந்நிலையில் அடுத்தபடியாக இருக்கின்ற மூலாதாரங்களைத் தேடிச்செல்வது கூடாது. இந்நிலையை குர்ஆனிய அறிவியலாளர்கள், **إنه من أبلغ التفاسير த.்.ப்ஸீர்களில் மிகவும் ஆளமானது என வர்ணிக்கின்றார்கள்.**

## *உதாரணங்கள்*

**அநீதி என்பதைக் குறிக்கும் ظلم என்ற சொல்.**

இது மனிதன் தனக்கும், பிறருக்கும் இழைக்கின்ற அநீதியைக் குறிக்கும் சொல் என்பது பொதுவான விளக்கமாகும். அதிலும் இணைவைத்தலைக் குறிப்பாகக் குறிக்கின்ற நிலையும் இருக்கின்றது என்பது நபித்தோழர்களின் கேள்விக்கு பதில் அளிக்கப்பட்ட பின்னரே தெரியவந்தது.

**[82** :الأنعام] {الَّذِينَ آمَنُوا وَلَمْ يَلْبِسُوا إِيمَانَهُم بِظُلْمٍ أُوْلَئِكَ لَهُمُ الأَمْنُ وَهُم مُّهْتَدُونَ} *எவர்கள் நம்பிக்கை கொண்டு, அவர்களது நம்பிக்கையை அநியாயத்துடன் கலக்கவில்லையோ அவர்களுக்கே (மறுமையில்) பூரண பாதுகாப்பு உண்டு. அவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள் (அல்அன்ஆம்: 82).*

இதை மேலோட்டமாகப் பாரக்கின்ற போது அநீதி செய்யாதவர்களை உலகில் காண்பது அரிது. எனவே நல்லறம் புரியும் ஒருவர் இழைக்கின்ற சிறு அநீதியாலும் அதற்காக சுவனத்தை இழக்க நேரிடும் என்பது நபித்தோழர்கள் மனதில் உருவான சந்தேகமாகும். அதனால்தான் அல்லாஹ்வின் தூதரே! எம்மில் யார்தான் தனக்கு அநீதி செய்யாதிருக்கின்றார் எனக் கேட்டுள்ளார்கள்?

குர்ஆனிய விளக்கதில் தலை சிறந்த அறிஞரான முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்

**قال: ليس كما تقولون، {لم يلبسوا إيمانهم بظلم}: بشرك، أو لم تسمعوا إلى قول لقمان لابنه: {يَا بُنَيَّ لا تُشْرِكْ بِاللهِ إِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيمٌ} [لقمان:**

**13] அந்த வசத்திற்கு நீங்கள் கூறுகின்ற விளக்கம் தவறானது என சுட்டிக்காட்டிய பின் , என் அருமை மகனே! நீ அல்லாஹ்வுக்கு இணைவைக்காதே! நிச்சமயாக இணைவைத்தல் மிகப்பெரும் அநீதியாகும் என** நல்லடியார் லுக்மான் தனது மகனுக்கு கூறியதை நீங்கள் செவிமடுக்கவில்லையா? எனக் கேட்டார்கள்.

இதன் மூலம் அல்அன்ஆம்: 82-ல் இடம் பெறும் **( ظلم ளுள்ம்)** என்ற சொல்லின் விளக்கம் இங்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இது பற்றிய அறிவின்றி குர்ஆனை விளக்க முற்படும் ஒருவர் நபித்தோழர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தையும் இணைத்தே விளக்குவார். இது குர்ஆனிய விளக்கத்தில் பாரியதொரு சிக்கலை தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. (1)

------------------

1- ابن تيمية ، مقدمة في أصول التفسير (ص 93-95)

2- محمد حسين الذهبي ، التفسير والمفسرون - (2 / 2)

### ***இரண்டாவது உதாரணம்:***

அமீன் ஷின்கீதி (ரஹ்) (ம: ஹி:1393) அவர்களின் விளக்கத்தைக் குறிப்பிட முடியும். அதாவது: அல்லாஹ் ஒரு படைப்பை பல நோக்கங்களின் அடிப்படையில் படைத்திருப்பான். அவற்றில் சிலவற்றை ஒரு இடத்திலும், மற்றவைகளை வேறு இடங்களிலும் குறிப்பிட்டிருப்பான். **அவற்றை மு.ஃ.பஸ்ஸிர் ஒருவர் கண்டுபிடித்து விளக்குவதும்** அல்குர்ஆனைக் கொண்டு அல்குர்ஆனை விளக்கும் வகையில் தொடர்புடையதாகக் கொள்ளப்படும்.

உதாரணமாக அல்அன்ஆம்: 97 வது வசனமாக இடம் பெறும் வசனத்தை எடுத்துக் கொள்ளலாம்.

.[الأنعام: **97**] {وَهُوَ الَّذِي جَعَلَ لَكُمُ النُّجُومَ لِتَهْتَدُوا بِهَا} ***நட்சித்திரங்கள் மூலம் வழிகளை நீங்கள் அறிந்து கொள்வதற்காக அவனே! உங்களுக்காக அவற்றை படைத்தான்.*** வேறு இடங்களில் அதன் நோக்கம் பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நட்சித்திரங்களை அடிவானத்தின் அலங்காரமாகவும், ஷைதான்களின் எறிகற்களாகவும் இருப்பதற்காகப் படைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அது பற்றி பின்வரும் வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

{وَلَقَدْ زَيَّنَّا السَّمَاءَ الدُّنْيَا بِمَصَابِيحَ وَجَعَلْنَاهَا رُجُوماً لِّلشَّيَاطِينِ} [الملك: **5**]

***நிச்சயமாக நாம் கீழ்வானத்தை ஒழிவிளக்குகளால் அலங்கரித்துள்ளோம். இன்னும் அவற்றை ஷைதான்களுக்கான எறிகற்களாகவும் ஆக்கியுள்ளோம். (அல்முல்க்: வசனம்: 05).***

{إِنَّا زَيَّنَّا السَّمَاءَ الدُّنْيَا بِزِينَةٍ الكَوَاكِبِ * وَحِفْظاً مِّن كُلِّ شَيْطَانٍ مَّارِدٍ} [الصافات: **6، 7**]

***நிச்சயமாக நாம் கீழ்வானத்தை அழகிய ஒழிவிளக்குள் மூலம் அலங்கரித்துள்ளோம். இன்னும் கட்டுக்கடங்காது ஒ்வவொரு ஷைதான்களின் இருந்தும் பாதுபாகாப்பாகவும் (அவைகளை ஆக்கியுள்ளோம்) (அஸ்ஸா.ஃ.ப்பாத். வசனம்: 6-7)*** **மேற்படி** வசனங்களில் நட்சத்திங்கள் ஏன் படைக்கப்பட்டுள்ளன என்ற தெளிவைப் பெற முடிகின்றது.

***வெளிப்படையில் முரண்பாடு போன்று தெரிவதை ஒன்றிணைத்து விளங்குதல். இது குர்ஆனைக் கொண்டு குர்ஆனை விளக்குதல் என்ற வகையில் உள்ளடங்கும்.*** உதாரணமாக ஆதம் நபி (அலை) அவர்களின் படைப்பு தொடர்பான செய்தியை எடுத்துக் கொண்டால் சில வசனங்களில் அவர்கள் மண்ணால் படைக்கப்பட்டார்கள் என்றும், மற்றும் சில இடங்களில் களி மண்ணால் என்றும், வேறு இடங்களில் சூடான, தட்டினால் கிண்,கிண் என்று சப்தம் வரும் மண்ணால் என்றும் கூறப்படுகின்றது.

ஆதம் நபி (அலை) அவர்கள் படைக்கப்பட்ட மண்ணின் தன்மையையும், அவர்கள் ஆரம்பம் முதல் உயிர் ஊதப்படும் வரை கடந்து வந்த அவர்களின் படைப்பின் நிலைகளையும் சுட்டிக்காட்டும் படிமுறைக

இங்கு ஒரு சொல்லுக்கான விளக்கம், ஒரு வசனத்திற்கான விளக்கம் என்பது மற்றொரு இடத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (2)

----------------

1- أضواء البيان للشنقيطي - (2 / 19)

2- مأخوذ من مقالات الشيخ مساعد الطيار ، ومن موقع الألوكة .

**குர்ஆனைக் கொண்டு குர்ஆனை விளக்குவதில் முரண்பாடுகளைப் போன்று தெரிவதை இணைத்து விளக்குவதும் உள்ளடங்கும்** என அறிஞர் ஹுஸைன் அத்தஹபி அவர்கள் சுட்டிக்காட்டுவதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஆதம் (அலை) அவர்களிக் படைப்பு பற்றி செய்தியைக் குறிப்பிட முடியும். ஒரு வசனத்தில் மண்ணில் இருந்து என்றும், வேறு வசனத்தில் கழிமண் என்றும், மற்றொன்றில் தட்டினால் சப்தம் வரும் மண் என்றும் கூறப்பட்டுள்ளது. இது அவர் பற்றிய படைப்பின் படி நிலைகளைக் குறிக்கும் என்று விளக்கம் தரப்படுகின்றது. (1)

**குர்ஆன்மூலம் குர்ஆனை விளக்குவதை முன்னுரிமை வழங்கிய அறிஞர்கள்**

குர்ஆனைக் கொண்டு குர்ஆனை விளக்கும் வழி முறை ஆரம்ப கால அறிஞரான **ஸைத் பின் அஸ்லம்** (மரணம்: ஹி:182) அவர்களிடம் காணப்பட்டுள்ளது.

**அவர், த:்.ப்ஸீர் துறையில் பிரசித்தி** பெற்று விளங்கியதுடன், அல்குர்ஆனைக்கொண்டு அல்குர்ஆனை விளக்கிய முன்னணி அறிஞர்களில் ஒருவராகக் கொள்ளப்படுகின்றார்.

இமாம் தபரி (மரணம்: ஹி: 310) அவர்கள் அத்தூர் அத்தியாம் ஆறாவது வசனமாக இடம் பெறும் எரிவூட்டப்படும் கடல் மீது சத்தியமாக என்ற வசனத்தை **الموقَد** எரிவூட்டப்பட்ட என்ற பொருள் தருவதுடன், **[التكوير: 6] {وَإِذَا البِحَارُ سُجِّرَتْ}** கடல்கள் தீமூட்டப்படும் போது என்ற அத்தக்வீர் அத்தியாத்தில் இடம் பெறும் ஆறாவது வசனத்தைக் கொண்டு விள்கியுள்ளார்கள்.

**அப்துர் ரஹ்மான் பின் ஸைத் பின் அஸ்லம் மூலம்** அந்த அறிவிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக இமாம் தபரி (ம:ஹி:310) அவர்கள் அறிவிப்பின் மூலம் அறிய முடிகின்றது.

**பிற்காலத்தில் இது பற்றி அதிகம் கவனம் எடுத்துக் கொண்ட அறிஞர்களாக மூவர் கொள்ளப்படுகின்றார்கள்.** இம்மூவரும் இதில் முக்கிய முன்னோடிகளாக விளங்கினார்கள். குறிப்பிடுகின்றார்கள். **அவர்களின் விபரம் பின்வருமாறு**

| இமாமின் பெயர் | நூலின் பெயர் | மரணம் |
|---|---|---|
| ஆல்ஹாபிள் இப்னு கஸீர் அத்திமஷ்கி (ரஹ்) | تفسير القرآن العظيم | ஹி:774 |
| அல்அமீர் அஸ்ஸன்ஆனி (ரஹ்) | مفاتح الرضوان في تفسير الذكر بالآثار والقرآن | ஹி1182 |
| இமாம் ஷின்கீதி (ரஹ்) | أضواء البيان في إيضاح القرآن بالقرآن | ஹி: 1393 |

ஒரு இடத்தில் பொதுப்படையாக இடம் பெறுவது மற்றொரு இடத்தில் குறிப்பாக வருவது, வரையறை இன்றி ஒரு இடத்திலும், மற்ற இடத்தில் வரையறை செய்தும் வருவது போன்றவைகளும் இவ்வகையில் சேர்ந்தாகும் இது பற்றிய விபரம் அல்குர்ஆனை விளக்குவோரிடம் காணப்பட வேண்டிய அடிப்படைகள் என்ற தலைப்பில் தரப்பட்டுள்ளது.

**அத்துடன், ஒரு சொல்லின் பொருள் மற்றொரு வசனத்தில் தெளிவுபடுத்தப்படுவதும் இவ்வகை சார்ந்தாகும்.** உதாரணம்: **[هود: 82] {وَأَمْطَرْنَا عَلَيْهَا حِجَارَةً مِّن سِجِّيلٍ مَّنضُودٍ}** لفظ «سِجّيل» في قوله تعالى: **ஸிஜ்ஜீல் என்ற இந்த சொல்**

**[الذاريات: 32، 33] {قَالُوا إِنَّا أُرْسِلْنَا إِلَى قَوْمٍ مُّجْرِمِينَ * لِنُرْسِلَ عَلَيْهِمْ حِجَارَةً مِّن طِينٍ}** **கழிமண்** الطين என்று விளக்கம் தரப்பட்டுள்ளது.

**அவ்வாறே,** ஒரு வசனத்தின் பொருளை மற்றொரு வசனத்தில் இடம் பெறும் பொருளை அடிப்படையாகக் கொண்டு விளக்குவதும் உள்ளடங்கும்.

இதற்கு التسوية என்ற சொல்லை எடுத்துக் கொள்ளலாம்.

**{يَوْمَئِذٍ يَوَدُّ الَّذِينَ كَفَرُوا وَعَصَوُا الرَّسُولَ لَوْ تُسَوَّى بِهِمُ الْأَرْضُ} [النساء: 42]** இறை நிராகரிப்பாளர்கள் மறுமையில் பூமி தம்மைக் கொண்டு சமப்படுத்தப்படக்கூடாதா என்று ஆதரவு வைப்பார்கள் என் (அந்நிஸா: வச: 42ல்) என இடம் பெறும் வசத்தை அந்நப.்். 40 வது வசனம், **[40 :النبأ] {وَيَقُولُ الْكَافِرُ يَا لَيْتَنِي كُنتُ تُرَابًا}** 'நான் மண்ணாக இருக்க வேண்டுமே எனக் (மறுமையில்) இறைமறுப்பாளன் கூறுவான் என்ற வசனத்தைக் கொண்டு விளக்குவார்கள் இவ்வாறு பல உதாரணங்கள் கூறப்படுகின்றன.

-----------------------

1- د/ مساعد الطيار ، بحوث في التفسير - (1 / 127)

## تفسير القرآن بالسنة அல்குர்ஆனை சுன்னாவைக் கொண்டு விளக்குதல்

சுன்னா இரண்டாவது மூலாதாரமாகும். அது குர்ஆனை விளங்குவதிலும், விளக்குவதிலும் பாரிய பங்களிப்பினைக் கொண்டிருக்கின்றது.

[النحل: 44] {وَأَنزَلْنَا إِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيْهِمْ وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُونَ} ***நபியே! நீர் மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக மக்களுக்காக இறக்கப்பட்ட இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கி வைத்தோம். அவர்கள் சிந்தனை பெறும் பொருட்டு (இறக்கினோம்). (அந்நஹ்ல். வசனம்: 44) (1)*** இவ்வசனம் அல்குர்ஆன் இறைத்தூதரின் விளக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறும் வசனங்களில் ஒன்றாகும்.

[النجم: 4] {وَمَا يَنْطِقُ عَنِ الْهَوَى إِنْ هُوَ إِلاَّ وَحْيٌ يُوحَى} **(முஹம்மதாகிய) அவர், தன்மனோ இச்சைப்படி பேசுவதில்லை, அவர், வஹியைத்தவிர வேறு எதையும் (மாரக்கமாக) பேசுவதும் இல்லை.** (அந்நஜ்ம். வசனம்: 3- 4) (2) இவ்வசனம் குர்ஆனிய விளக்கத்தில் இறைத்தூதரின் சுன்னாவின் வகிபாகம் பற்றிய பெறுமானத்தை சுட்டிக்காட்டுகின்றது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகராம் என்பது சுன்னா என்றுவரையறை செய்யப்பட்டாலும் அவை அனைத்தும் குர்ஆனுக்கான விளக்கமாக இடம் பெறவில்லை. மாற்றமாக அவற்றில் குர்ஆனுக்கு தேவைப்படும் அம்சங்கள் மாத்திரம் முழுமையான விரிவுரையாகக் கொள்ளப்படும் என்பது கவனிக்கத்தக்க விஷயமாகும். அதனால்தான் சிலர் இதை த.ஃப்ஸீர் அன்னபவி என்று கூறுவதை விட அத்த.ஃப்ஸீர் பிஸ்ஸுன்னா என அழைக்கிக்கின்றனர்

[البقرة: 58] {ادْخُلُوا البَابَ سُجَّداً وَقُولُوا حِطَّةٌ نَّغْفِرْ لَكُمْ خَطَايَاكُمْ} **பணிந்தவர்களான அதன் வாயிலால் பிரவேசியுங்கள், இன்னும் (மன்னிப்பு என்பதைக் குறிக்கும் சொல்லான-) ஹித்தா- மன்னிப்பாயாக என்றும் கூறுங்கள், உங்கள் தவறுகளை நாம் மன்னிப்போம் (அல்பகரா: வசனம்: 58) (3)**

இது பனூ இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ் இட்ட கட்டளை. ஆனால் அவர்கள், தமது பின்புட்டங்களால் இழுகிச் சென்றார்கள், ஹித்தாவை- ஹின்தா- தொலிக்கோதுமை என்று மாற்றியும் கூறினார்கள் (புகாரி, முஸ்லிம்) (2)

**ஹித்தா என்ற சொல் விளக்கத்தின் ஊடாக இது சுன்னாவில் இருந்து பெறப்பட்டது என்பதை விளங்க முடிகின்றது. சொல் சார்ந்த விளக்கம் த.ஃப்ஸீர் கவ்லி எனக் கூறப்படும்.**

மற்றது, கட்டளையாக, அல்லது தடையாக வந்ததற்கு நடைமுறை சார்ந்த விளக்கம் அளித்தல். இது **த.ஃப்ஸீர் .ஃபி.ஃலி** எனப்படும். உதாரணமாக தொழுகை பற்றிய விளக்கம்.

அவ்வாறே, [النصر: 1] {إِذَا جَاءَ نَصْرُ اللهِ وَالْفَتْحُ} என்ற அத்தியாயம் இறங்கியதும் ருகூ.ஃ, சுஜூதில் பின்வரும் பிரார்த்தனையை அதிகமாக ஓதுவார்கள். «سبحانك اللهم ربنا وبحمدك، اللهم اغفر لي، يتأوّل القرآن» அந்த அத்தியாயம் இறங்கியதும் ருகூ.ஃ, சுஜூதில் سبحانك اللهم ربنا وبحمدك، اللهم اغفر لي، என்ற பிரார்த்தனையை அதிகமாக ஓதுவர்களாக இருந்தார்கள் எனக் குறிப்பிடும் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள், குர்ஆனை அவர்கள் விளக்குவார்கள் எனக்குறிப்பிடுகின்றார்கள். (முஸ்லிம்). (1)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விளக்கம் பற்றிய ஆய்வு செய்கின்ற போது அகீதா, அக்லாக், முஆமலாத், குற்றவியல் போன்ற சகல பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருப்பதை அவதானிக்கலாம்.

--------------------

1- ***2 (அந்நஹ்ல். (வசனம்: 44)***
2- **(அந்நஜ்ம். (வசனம்: 3- 4)**
3- **அல்பகரா: (வசனம்: 58)**
4- صحيح مسلم باب التسبيح في الركوع والسجود (رقم : 775 )

## تفسير الصحابة நபித்தோழர்களின் மூலம் பெறப்படும் த.ஃப்ஸீர்

நபிகள் நாயகத்துடன் வாழ்ந்த நபித்தோழர்கள் சிறந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள், அல்குர்ஆனிய அறிவில் சிறந்த சிந்தனையாளர்களாக விளங்கினார்கள். சிறந்த நூற்றாண்டில் வாழ்ந்த அம்மக்கள் பற்றிக் குறிப்பிடும் அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

أَحَقُّ مَنْ صَدَّقْتُمْ أَصْحَابُ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الَّذِينَ اخْتَارَهُمْ اللَّهُ لِصُحْبَةِ نَبِيِّهِ وَإِقَامَةِ دِينِهِ (مسند أحمد / رقم:12398) (1)

***நீங்கள் உண்மைப்படுத்திட அதிகம் தகுதி பெற்றவர்கள் நபியின் தோழர்கள்தாம். அவர்களைத்ததான் அல்லாஹ் நபியின் தோழமைக்காகவும், அவனது மார்க்கத்தை நிலை நாட்டிடவும் தேர்வு செய்தான். (1) எனக் குறிப்பிடுகின்றார்கள்.***

நபித்தோழர்கள் பற்றிக் குறிப்பிடும் இமாம் இப்னுல் கைய்யிம் (ரழி) அவர்கள்

والصحابة أعلم الأمة بتفسير القرآن ويجب الرجوع إلى تفسيرهم ***நபித்தேழர்கள் அல்லாஹ்வின் வேதமான குர்ஆன் பற்றி அதிகம் அறிந்தவர்கள், அவர்களின் விளக்கத்தின் பக்கம் மீள்வது அவசியமாகும் எனக் குறிப்பிடுகின்றார்கள். (2)***

## நபித்தோழர்களின் த.ஃப்ஸீரின் பக்கமான தேவைக்கான காரிணகள்.

1- வஹியின் காலத்தில் வாழ்ந்து, அதன் நிலைகள் பற்றி நன்கு அறிந்தவர்கள்.
2- வஹி பற்றி நிகழ்வுகளை நேரடியாகக் கண்டவர்கள். அதனால் பிறர் அறியாத பல விஷயங்களை அறிந்து வைத்திருந்ததுடன், குர்ஆன், சுன்னாவின் சட்டவாக்கத்தில் ஆழ்ந்த புலமை உடையவர்களாகவும் காணப்பட்டார்கள். இவர்களிடம் இருந்து வரும் த.ஃப்ஸீர்கள் ஒருமித்த, முரண்பாடுகள் அற்றவையாக இருப்பின் அது முழுமையாக அங்கீகரிக்கப்படும். அதே வேளை கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருப்பின் அது இஜ்திஹாத்களில் ஒன்றாகக் கொள்ளப்பட்டு ஏற்புடையது அங்கீகாரம் பெறும்.
3- நபித்தோழர்களின் த.ஃப்ஸீர் சிரமத்தை விட்டும் தூரமானதாகும். அவர்கள் குர்ஆன் விளக்கத்தில் தம்மை சிரமப்படுத்தி விளக்கம் அளிப்பதில்லை. வெளிப்படையாகத் தெளிவாகத் தெரிவதை தெளிவுபடுத்துவார்கள்.
4- வரலாற்றுப் பின்னணியை விளக்குதல்.
**5-** மொழி அடிப்படையிலான விளக்கம் அளித்தல். அரபு மொழியில் சிறந்த ஆளுமையும், புலமையும் பெற்றமக்களாக அவர்கள் விளங்குவதே இதற்கு காரணம்.

___________

**1- (مسند أحمد / رقم:12398**
**2- التبيان في أقسام القرآن - (ج 1 / ص 140)**
**3- موقع الشيخ مساعد الطيار: مقالات الشيخ مساعد الطيار عن التفاسير**

## த.ஃப்ஸீர் செய்வதில் ஸஹாபாக்களிடம் காணப்பட்ட கருவிகள்

நபித்தோழர்கள் தமக்கு கிடைத்த விளக்கத்தின் அடிப்படையில் அல்குர்ஆனுக்கு விளக்கம் தந்தனர். அவற்றில் மார்க்கத்திற்கு உடன்பட்டவைகளாகக் காணப்பட்டவை அங்கீகரிக்கப்பட்டன. அவர்களிடம் பின்வரும் அம்சங்கள் விளக்கக் கருவியாகக் காணப்பட்டன.

1- மொழியின் அமைப்பும், அதன் ரகசியமும் பற்றிய அறிவு
2- அரபுக்களின் வழக்குககளை அறிந்திருத்தல்.
3- குர்ஆன் இறங்கியபோது அரபுப் பிரதேசத்தில் வாழ்ந்த யூத கிரிஸ்தவர்களின் நிலைகள் பற்றிய அறிவு
4- விளக்க சக்தியும், அறிவின் விசாலமும் (1)

## நபித்தோழர்களான மு.ஃ.பஸ்ஸிரூன்கள்

அறிஞர் சுயூதி அவர்கள் அல்இதகான் என்ற நூலில் பின்வரும் நபித்தோழர்களை மு.ஃ.பஸ்ஸிரூன்களாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

1- நான்கு கலீ.ஃ.பாக்கள் (ரழி),
2- இப்னு மஸ்ஊத் (ரழி),
3- இப்னு அப்பாஸ் (ரழி),
4- உபைய் இப்னு க.ஃ.ப் (ரழி)
5- முஆத் பின் ஜபல் (ரழி),
6- ஸாலிம் மவ்லா ஹுதை.ஃ.பா (ரழி),
7- ஸைத் பின் தாபித் (ரழி)
8- அபூமூஸா அல்அஷ்அரிய்யி (ரழி),
9- அப்துல்லாஹ் பின் சுபைர் (ரழி)

இவர்கள் அல்லாத பலர் கூறப்படுகின்றனர். அவர்களில் அனஸ் பின் மாலிக், அபூஹுரைரா, இப்னு உமர், ஜாபிர் பின் அப்தில்லாஹ், அப்துல்லாஹ் பின் அம்று பின் ஆஸ், ஆயிஷா போன்றவர்கள் முக்கியமானவர்கள். இருந்தாலும் அவர்கள் மூலம் குறைவான அறிவிப்புக்களே இடம் பெற்றுள்ளன. நான்கு கலீ.ஃ.பாக்களில் முதல்மூவர் மூலமான த.ஃ.ப்ஸீர் மிகக் குறவைாகவே அறிவிக்கப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2)

------------------------------------------

1- د. محمد حسين الذهبى التفسير والمفسرون – (2 / 10)
2- الإتقان في علوم القرآن – (2 / 493)

## அரபு மக்களின் பாரம்பரியம் பற்றிய அறிவு குர்ஆனை விளக்குவதில் மற்றொரு அம்சமாகக் கொள்ளப்படும்

**يقول الشاطبي في بيان أهمية معرفة الأحوال في التفسير: (ومن ذلك: معرفة عادات العرب في أقوالها وأفعالها ومجاري أحوالها حالة التنزيل، وإن لم يكن ثَمّ سبب خاص، لا بدّ لمن أراد الخوض في علم القرآن منه، وإلا وقع في الشّبه والإشكالات التي يتعذّر الخروج منها إلا بهذه المعرفة)**

அரபுக்களின் அன்றாட பழக்கவழக்கங்கள், சொல்லாடல்கள், செயல் முறைகள், அல்குர்ஆன் இறங்கிய வேளை அவை காணப்பட்ட நிலைகள் பற்றிஅறிந்திருப்பது அவசியமாகும். அதற்கு குறிப்பிட்ட காரணி இல்லாதிருப்பினும் சரியே! குர்ஆனை அறிம்ய விரும்பு ஒருவர் அது பற்றிய அறிவில் மூழ்கியவராக இருப்பது அவசியமாகும். அவ்வாறில்லாதபோது வெளியேற முடியாத அளவு வீண்சந்தேகங்களிலும், குழப்பங்களிலும் அவர் வீழ்ந்திட நேரிடும். இந்த அறிவுதான அதிலிருந்து காத்துக்கொள்வதற்கான வழிமுறையாகும்.

**ما رواه البخاري في تفسير قوله تعالى: {لَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ أَن تَبْتَغُوا فَضْلاً مِّن رَّبِّكُمْ..} [البقرة: 198] عن ابن عباس رضي الله عنهما قال: (كانت عُكاظٌ ومجنّةٌ وذو المجاز أسواقاً في الجاهلية، فتأثّموا أن يَتّجِروا في المواسم، فنزلت {لَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ أَن تَبْتَغُوا فَضْلاً مِّن رَّبِّكُمْ..} في مواسم الحج)**

***நீங்கள் உங்கள் இரட்சகனின் அருள்பாக்கியத்தை (ஹஜ்ஜின் போது) அடைந்து கொள்வதில் உங்கள் மீது குற்றமில்லை (அல்பகரா: வச: 198) .***

இதை விளக்குகின்ற இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள், **ஹஜ்காலத்தில் உகாழ், மஜின்னா, துல்மஜாஸ்** ஆகிய சந்தைகள் ஜாஹிலிய்யக்கால சந்தைகளாக விளங்கின. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்கள் ஹஜ்ஜின் போது வியாபாரம் செய்வதைப் பாவமாகக் கருதினார்கள். அதை விலக்கும் முகமாக மேற்படி வசனம் இறங்கியது. இது ஒரு நபித்தோழரின் விளக்கமாகும். இந்த வரலாற்றுப் பின்னணி இன்றி அதனை மேலோட்டமாக விளங்குவது கடினமானதாகவே இருக்கும்

## நபித்தோழர்களின் விளக்கத்தின் பக்கமான தேவை என்ன?

***பல காரணிகள். அவற்றில் பிரதான காரணிகளாக பின்வரும் காரணிகள் முனைவக்கப்படுகின்றன.***

1- அரபு மொழியியல் அறிவில் ஆழ்ந்த புலைம உள்ளவர்கள். இவர்களிடம் இயல்பாகவே அரபுத்துறையில் புலமை காணப்பட்டது. இந்தப் புலமை பின்வந்த அறிஞர்களிடம் காணப்பட்டாலும் ஒரு வசனத்தை சிரமிமின்றி விளங்குதல், தெளிவாக விளங்குதல், ஆளமாக விளங்குதல் போன்ற நிலைகளில் நபித்தோழர்களில் இருந்தும் பின்வந்தவர்கள் வேறுபடுகின்றனர்.

நபித்தோழர்களின் விளக்கத்தை அறியும் ஒரு மாணவர் அவர்களின் அறிவின் மீதுள்ள நம்பிக்கையினால் அவர்கள் மீது மரியாதைக் கண்கொண்டு பார்க்கின்ற நிலை ஏற்படுகின்றது. பிற்காலத்தில் வந்தவர்களின் தீர்ப்புக்களுடன் இவர்களின் தீர்ப்புக்களுடன் முரண்படுகின்ற போது அதற்கு முன்னிலை வழங்க வேண்டிய தேவையும் அவசியமும் ஏற்படுகின்றது.

-----------------------

1- د/ مساعد الطيار بحوث في أصول التفسير ومناهجه ( ص 45 )

பிற்காலத்தில் தோன்றிய இமாம்களான ஷமக்ஷரி, ஸஜ்ஜாஜ், இப்னு அதிய்யா, குர்துபி, அபீஹய்யான், ராஸி, இப்னு கஸீர் போன்ற அறிஞர்களின் தீர்ப்பை முற்படுத்துவதை விட நபித்தோழர்களின் ஏகமனதான ஒரு தீர்ப்பை முற்படுத்துவதும், நடைமுறைப்படுத்துவதும் மிகச்சிறந்தததும், மனதுக்கு திருப்தி தரக்கூடியதுமாகும்.

இமாம் ஹாகிம் (ரஹ்) அவர்கள் நபித்தோழர்களின் குர்ஆனிய விளக்கத்தின் தராதரம் பற்றி **அவர்களின் முஸ்தத்ரக் என்ற நூலில்** குறிப்பிடும் போது

« ليعلم طالب هذا العلم أن تفسير الصحابي الذي شهد الوحي والتنزيل عند الشيخين حديث مسند »

**இமாம்களான புகாரி, முஸ்லிமிடம் வஹியின் வருகையின் போது நேரடியாக சமூகமளித்திருந்த நபித்தோழர்களின் தஃப்ஸீர் அறிவிப்பளார் தொடர்பறாத வகையைச் சார்ந்த நிலையில் மதிக்கப்பட்டது என்பதை அறிவு படிக்கின்ற மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஒரு இடத்திலும், மற்றொதொரு இடத்தில்:** وقال في موضع آخر من كتابه: (هو عندنا في حكم المرفوع) **"அது நம்மிடம் மர்ஃபூஃ அறிவிப்பாளர் வரிசை நபிகள் நாயகம் வரை சென்றடைந்த தரத்தைச் சார்ந்தாகும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.**

அதனால்தான் அவர்கள் பற்றி குறிப்பிடுகின்ற அறிஞர்கள். فهم أعلم الأمة بمراد الله عز وجل من كتابه **அவர்கள் அல்லாஹ் வேதத்தில் அவனது நாட்டம் பற்றி அதிகம் அறிந்தவர்கள் என்று சுருக்கமாக வர்ணிப்பார்கள்.**

2- அவர்களின் நோக்கங்கள் தூய்மையானதாகும். பிறரை கொச்சைப்படுத்தி தமது கருத்தை முன்வைத்தல், தனது கட்சிக்கு, அணிக்கு மத்ஹபுக்கு ஆள் சேர்த்தல், தனது கருத்து சத்தியத்திற்கு முரண்பட்டதாக இருப்பினும் அதைச் சரிகாண வேறுவழிதேடுதல், தனக்குவாசியாக தீர்ப்பளித்தல் போன்ற தீய போக்குகளில் இருந்து தம்மைக் காத்துக் கொண்ட உத்தமர்கள்.

ஸஹாப்பாக்களின் கருத்துக்கள் காலத்தால் முந்தியவை, பின்பற்றத்தக்க தன்மை அற்றவை, வெளிப்படையான பொருள்களை மாத்திரம் கொண்டவை, செயல்வடிவம் கொடுத்து நடைமுறைப்படுத்த தகுதியற்றவை போன்ற கருத்துக்களை முன்வைத்து அவர்களின் கருத்துக்களை குறைகண்டதன் விளைவாகவே கவாரிஜ், முர்ஜியா, கத்ரிய்யா, ஜஹ்மிய்யா, முஃதஸிலா போன்ற வழிகெட்ட பிரிவுகள் தோற்றம் பெற்றன என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விஷயமாகும். இந்தப்பிரிவினர் தமக்கென ஒரு போக்கைக் கொண்டதனால் இறைமறைவசனங்களை திரித்தும், தவறாக விளங்கியும், விளக்கியும் பொருள் தந்தும் மக்களை வழிகெடுத்தனர்.

---------------

1- المستدرك على الصحيحين للحاكم – (7 / 148)

நபித்தோழர்களின் காலத்தில் வழிகேடுகள் தோற்றம் பெறவில்லை. மாற்றமாக அவர்களை விட நாமே மெத்தப்படித்தவர்கள் என்று தம்மைக் கூறிக் கொண்டோர் காலத்தில்தான் வழிகேடுகள் புற்றீசல்களாகப்பரவிக் காணப்பட்டன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

***ஸஹாபாக்களின் தப்ஸீரில் பேணப்படும் இருபடிநிலைகள்.***

***1- நக்ல். النقل நேரடியான சான்றைக் கொண்ட விளக்கம்.***

***2- இஸ்தித்லால் الاجتهاد / الاستدلال ஆதாரத்தை அகழ்ந்தெடுத்தல் முறையில் அமைந்தது.***

முதலாவது வழிமுறையில் நேரடியாக அவதானித்தவைகள், ஸபபுன்னுஸுல், குர்ஆனிய வசனங்கள் இறங்கியவர்களின் நிலைகள் பற்றி அறிதல், நேரடியாக செவிமடுத்தவைகளை அறிவித்தல், மற்றவர்களிடம் இருந்து செவிமடுத்தவைகளை அறிவித்தல், மறைவான செய்திகளைக் கொண்டதை அறிவித்தல் போன்ற அம்சங்கள் உள்ளடங்கும்.

**இரண்டாவது இஸ்தித்லால்- ஆதாரம் பெறும் வழிமுறை-**

இதில் குர்ஆனைக் கொண்டு குர்ஆனை விளக்குதல், த.ஃப்ஸீரில் நேரடியான சான்றாக இடம்பெறாத இறைத்தூதரின் ஹதீஸ்களைக் கொண்டு விளக்குதல், அரபு மொழி அடிப்படையில் விளக்குதல் , இடம்பாடான கருத்துக்களைக் கொண்டு விளக்குதல் போன்ற அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றது.

***நபித்தோழர்களின் காலத்த.ஃப்ஸீர் பின்வரும் சிறப்பம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.***

1- வேதக்காரர்கள் வழியாக அறிவிக்கப்படும் செய்தி மிகவும் அரிதாகக் காணப்பட்டமை.
2- அல்குர்ஆன் இறங்கிய காலத்தில் வாழ்ந்த சமூகம், அவர்களின் வழக்குகள் பற்றி முழுமையாக அவர்கள் அறிந்திருந்த காரணத்தினால் அவர்களின் த.ஃப்ஸீர் அல்குர்ஆனின் முழு வசனங்களையும் அவர்களின் விளக்கம் உள்ளடக்க வில்லை. அப்படியானதொரு தேவை அப்போது உணரப்படவில்லை.
3- த.ஃபஸீர் செய்கின்ற தேவயற்றமுறையில் அலட்டிக் கொள்ளும் பழக்கம் இல்லாதவர்களாக காணப்பட்டார்கள். வெளிப்படையில் தெரிகின்ற விளக்கத்துடன் நிறுத்திக் கொண்டார்கள். தேவையற்ற கற்பனைகள், யூகங்களை உண்டாக்கி அதற்கு விளக்கம் தரவில்லை.
4- அவர்களின் காலத்தில் த.ஃப்ஸீர் அறிவிப்பின் மூலமே பெறப்பட்டது. தொகுப்பின் மூலம் பெறப்படவில்லை. (1)

-----------------

1- د: مساعد الطيار ، بحوث في التفسير ومناهجه ص 36 .

## தஃப்ஸீரின் பிராதான வகைகள்

முதலாவதாக :- தஃப்ஸீர் சட்ட வாக்கத்தின் அடிப்படையில் இரண்டு வகைப்படும்.

1- அத்தஃப்ஸீா பில் மஃதூா். (ஆதாரத்தின் அடிப்படையில் அமைந்தவை)

2- அத்தஃப்ஸீா பிர்ரஃயி ( அபிப்பிராய அல்லது, சிந்தனையின்- அடிப்படையில் அமைந்தவை) அது இரண்டாவது வகை இருவகைப்படும்

அத்தஃப்ஸீர் பிர்ரஃயி

1- அத்தஃப்ஸீர் பிர்ரய்யில் மஹ்மூத். 2- இத்தப்ஸீா பிர்ரய்யில் மத்மூம்.

(ஒப்புக் கொள்ளப்பட முடியுமானவை) (ஒதுக்கப்பட வேண்டியவை )

**இரண்டாவதாக:-** தஃப்ஸீர் ஆசிரியர்கள் தமது தப்ஸீாகளில் கடைப்பிடித்த அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டும், அவைகளில் காணப்படும் பெரும்பாலான கருத்துக்களை கவனத்தில் கொண்டும் தஃப்ஸீர் பிரிவின் வகைகளை பின் வரும் அடிப்படையில் வகுக்க முடியும்.

1- பிக்ஹு சட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கும் தஃப்ஸீா்கள்.
2- இலக்கியத்துறைக்கு முன்னுரிமை வழங்கும் தஃப்ஸீா்கள்.
3- அல்-இஃராப் (குறியீட்டு, இலக்கிய)பகுதிக்கு முன்னுரிமை வழங்கும் தஃப்ஸீா்கள்.
4- அறிவியல் சாா்ந்த பகுதிக்கு முன்னுரிமை வழங்கும் தஃப்ஸீா்கள்.
5- (இஷாரி) உள்ளெழுந்தவாரியான பகுதிக்கு முன்னுரிமை வழங்கும் தஃப்ஸீா்கள்.
(மனிதா்களுக்குத்தட்டுப்படாத விளக்கங்கள் கூறுவதைக் குறிக்கும்)
6- சமூகவியல் ஒழுக்கவியல் துறைக்கு முன்னுரிமை வழங்கும் தஃப்ஸீா்கள். என ஆறு பிரிவுகளாக வகுக்க முடியும்.

# அத்த.ஃப்ஸீர் பில் ம.ஃதுஸுர்

**வரைவிலக்கணம்:** அல்குர்ஆனிய வசனங்களை விளக்குவதில் ஆதாரபூர்வமான செய்திகள் மீது மாத்திரமே அதன் விளக்கம் அமைந்திருக்கும். எந்த ஒரு வசனத்தை விளக்குவதாக இருப்பினும் அதனை குர்ஆன் விளக்க வழிமுறைகளைக் கொண்டு ஆதாரத்துடன் விளக்கதல். இதில் ஆதாரமின்றி விளக்குவதை எவ்வித கரிசனையும் காட்டப்படுவதில்லை. இதற்கே '**தப்ஸீர் அல்ம.ஃதூர்**" எனக் கூறப்படும்.

## த.ஃப்ஸீர் அல் ம.ஃஸுரின் சிறப்பும் அந்தஸ்தும்

இது த.ஃப்ஸீரின் வகைகளில் அதி சிறந்ததும், மிக உயர்ந்ததுமாகும். காரணம் இவ்வகையில் குர்ஆனின் நோக்கத்தை நன்கறிந்தவனான வல்ல அல்லாஹ்வின் வசனத்தைக் கொண்டும், மேலும் குர்ஆனுக்கு விரிவுரையாளரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விளக்கத்தைக் கொண்டும், அதன் மொழியின் தாட்பரியத்தை அறிந்தவர்களான, அதன் இறக்கத்தை நேரில் கண்டவர்களான நபித் தோழர்களின் விளக்கத்தின் அடிப்படையிலும் விளக்கப்படுகின்றது. இவ்வகையில் இடம் பெறும் அறிவிப்பாளர் வரிசை நபி (ஸல்) அவர்கள் வரை, அல்லது நபித்தோழர்கள் வரை அறிவிப்பாளர்களைக் கொண்டு இடம் பெறுவது நிபந்தனையாகும்.

## த.ஃப்ஸீர் அல் ம.ஃஸுரின் வகைகள்

**தப்ஸீர் அல் ம.ஃதூர் இரண்டு வகைப்படும்**

1- எது சரியான அறிவிப்பிக்கை கொண்டது. அதை ஏற்றுக் கொண்டு அதன் படி அமுல் நடப்பது அவசியமாகும்.

2- மேற் கூறப்பட்ட காரணிகளைக் கொண்டு ஆதாரமற்றவையாகக்காணப்படுபவை. இதனை ஆதாரமாக எடுத்துக் கூறுவதோ, ஏற்றுக் கொள்வதோ கூடாது.

**த.ஃப்ஸீர் அல் ம.ஃஸுரின் சட்டம்**

தப்ஸீர் அல்ம.ஃதூரிலிருந்து வெளி வரும் சட்டங்களை எடுத்து நடப்பதும், அதனை புறக்கணிக் காதிருப்பதும் அவசியமாகும்.

**த.ஃப்ஸீர் அல் ம.ஃதூரில் காணப்படும் பல கருத்துக்கள்.**

த.ஃப்ஸீர் அல் ம.ஃதூரில் காணப்படும் முரண்பாடு போன்ற பல கருத்துக்கள் உண்மையில் முரண் பாடாகக் கொள்ளப்படமாட்டாது. அது ஒரு அடிப்படையை விளக்கும் பல விளக்கங்களைக் கொண்ட கருத்தாகவே கொள்ளப்படல் வேண்டும்.

உதாரணமாக 'நேரான வழியில் எம்மை நடத்துவாயாக" என்ற வசனத்தை விளக்க முற்படும் த.ஃப்ஸீர் ஆசிரியர்கள் **நேரான வழி என்பது** இஸ்லாம், அல்குர்ஆன், சத்தியவழி, போன்ற விளக்கங்களைக் கூறுவதைக் கூற முடியும். இதில் அனைத்தும் சரியாதாகவே கொள்ளப்படும். (1)

-----------------

1- مكتب دعوة وتوعية الجاليات بالجبيل ، مذكرة الشيخ خالد العميرى ، المستوى الثالث

## த.ஃப்ஸீர் அல்-ம.ஃஸூரின் அறிவிப்பில் பலவீனம் தோன்று வதற்கான காரணிகள்.

நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்கள் வழியாக அறிவித்த தப்ஸீரிலும், தாபியீன்கள் நபித்தோழர்கள் வழியாக அறிவித்த தப்ஸீரிலும் பலவீனம் புணைந்துரைத்தல் போன்ற நிலை உருவாகுவதற்கான காரணிகள்.

### 1-குறித்த மத்ஹபில் பிடிவாதம்.

இந்நிலை தப்ஸீரில் புணைந்துரைத்தல் ஊடுவுருவதற்கு பெரும் பங்களிப்புச் செலுய்தது. குறிப்பாக, 'மதாஹிப்-அல்-பாதினிய்யா" (மார்க்கத்தில் அகம்- புறம்- என்ற இருநிலைகள் இருப்பதை வாதிடுவோர்) பிரிவைச் சேர்ந்த "ஸனாதிகா" மற்றும் "ரா.ஃபிழாப்" பிரிவுகள் தோன்றிய பின்னர் அதிகம் பரவியது. மேலும் இஸ்லாமிய விரோதிகளின் சதியும் இஸ்லாமிய வேடம் தரித்தவர்களான நயவஞ்சகர் கூட்டத்தின் நடவடிக்கைகளும் இதற் வலுச் சேர்த்ததை மறுக்க முடியாது.

### 2- தப்ஸீர் துறையில் - இஸ்ராயீலிய்யாத் - வேதக்காரர்களிடமிருந்து பெறப்படும் செய்திகள்- ஊடுருவியமை.

3- "**சனத்**" அறிவிப்பாளர் வரிசையை இல்லாதொழித்தமை. இதனால் ஆதாரபூர்வமான செய்திகளுடன் ஆதாரமற்ற செய்திகள் கலப்பதற்கு சாதகமான நிலை தோன்றியது.

## த.ஃப்ஸீர் அல் ம.ஃதூரின் மூலாதாரங்கள்.

**த.ஃப்ஸீர் அல்ம.ஃதூரின் மூலாதாரங்களாக:-**

1-அல்குர்ஆன்.

2-அஸ்ஸுன்னா அந்நபவிய்யா.

3-நபித் தோழர்களின் விளக்கங்கள்.

4-தாபியீன்களின் விளக்கங்கள் ஆகியவை கொள்ளப்படுகின்றன.

--------------------

1- د/ مساعد الطيار، بحوث في أصول التفسير ومناهجه ص 65- 75

# அத் த.ஃப்ஸீர் பிர்ர.ஃய்

**வரை விலக்கணம்:-**

குர்ஆனை விளக்கும் முபஸ்ஸிர் தனது சொந்த விளக்கத்திலும், வரவேற்கப்பட முடியுமான ''ர.ஃய்'' அபிப்பிராயத்திலும் தனது விளக்கத்தை கொண்டிருப்பதற்கு "த.ஃப்ஸீர் அர்ர.ஃய்'' என்று கூறப்படும்.

## த.ஃப்ஸீர் அர்ர.ஃயின் வகைகள்.

1- -"தப்ஸீர் பில்-ற.ஃயில் மஹ்மூத்'' வரவேற்கப்பட முடியுமான கருத்தில் அமைந்த த.ஃப்ஸீர் விரிவுரையின் போது தப்ஸீர் அல்ம.ஃதூர் கிடைக்காத போது '**இஜ்திஹாத்**" மூலமாக, அல்லது, ஷரீஆ சார்ந்த அறிவு ஞானங்கள் மூலம் விளக்கு வதைக் குறிக்கும்.

2-"**தப்ஸீர்பிர்ற.ஃயில் மத்மூம்**"-வரவேற்கப்பட முடியாத-புறந்தள்ளப்பட வேண்டிய தப்ஸீர்.

அதாவது '**இஜ்திஹாதின்**" நிபந்தனைகளில் ஒரு நிபந்தனையை அல்லது, மு.ஃபஸ்ஸிர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய நிபந்தனைகளில் ஒன்றை அல்லது, த.ஃப்ஸீர் செய்வதற்கான நிபந்தனை களில் ஒன்றை இழந்த நிலையில் செய்யப்படும் த.ஃப்ஸீருக்கே **த.ஃப்ஸீர்மத்மூம்** எனக்கூறப்படும்.

## த.ஃப்ஸீர் பிர்ர.ஃயின்" சட்டம்.

"த.ஃப்ஸீர் பிர்ரய்'' மூலம் சட்டம் பெற முயுமா? என்பதில் அறிஞர்கள் இரண்டு கருத்தில் உள்ளனர்.

**முதலாவது பிரிவினர்:-** முடியாது என வாதிடுவோர்

இப்பிரிவினர் தமது கூற்றிற்கு ஆதாரமாக அல் குர்ஆன், அஸ்ஸுன்னா, நபித்தோழர்களின் விளக்கம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொள்கின்றனர். அவர்கள் பின்வரும் ஆதாரங்களை சமர்ப்பிக்கின்றனர்.

1- நபியே! உமக்கு அறிவற்ற விடயத்தில் நீர் தலையிட வேண்டாம். (அல்இஸ்ரா:36)

2- நீங்கள் அறியாத ஒன்றில் அல்லாஹ்வின் மீது பொய்யுரைப்பதையும் (ஷெய்தான் உங்களுக்கு ஏவுகின்றான். (அல்பகரா:-169) இந்த வசனங்கள் அறிவில்லாது இறைவன் மீது பொய்யுரைப்பதையும், அபிப்பிராயத்தின் அடிப்படையில் விரிவுரை செய்வதையும் எச்சரிக்கின்றது.

அதே வேளை அபிப்பிராயத்தின் அடிப்படையில் கூறப்படும் கருத்தை அது அல்லாஹ்வின் கருத்தென அறுதியிட்டுக் கூறவும் முடியாது என்றும் வாதிக்கின்றனர்.

(நபியே!) மனிதர்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவும், அவர்கள் சிந்திப்பதற்காகவும் உமக்கு இவ்வேத்தை நாம் அருளினோம். (அந்-நஹ்ல்:44) இந்த வசனம் நபி (ஸல்) அவர்களின் விளக்கத்தை மாத்திரம் குறிப்பாக்குவதோடு, பிறரின் விளக்கத்தை மறுத்துரைக்கவும் செய்கின்றது எனவும் வாதிடுகின்றனர்.

1-குர்ஆனில் சொந்த விளக்கம் கூறுபவன் நரகில் தனக்கொரு இருப்பிடத்தைத் தேடிக் கொள்ளட் டும்.என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி நஸயி அஹ்மத்).

-----------------------------

1- المصدر السابق (ص 78- 85 )

எவா் குா்ஆனில் சொந்த விளக்கம் கூறுகின்றாரோ அ(வ்விளக்கத்)தை சரியாகக் கூறினாலும் அவர் தவறு இழைத்தவராவார். என நபி (ஸல்) அவா்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவா்கள் அறிவிக்கின்றாா்கள். (நஸயி அபூதாஊத்)

3-அபூபகா் சித்தீக் (ரழி) அவா்களிடம் திருமறை வசன மொன்றின் விளக்கம் பற்றி வினவப்பட்ட போது"இறை மறையில் நான் அறியாத ஒன்றை அறிந்தது போல் (அபாண்ட மாகக்) கூறினால் எந்த வானம்தான் எனக்கு நிழல் கொடுக்கும்"? எந்த பூமிதான் என்னை அணைத்துக் கொள்ளும்"? என வினவுவாா்கள். என வந்துள்ளது.

-4- மதீனாவில் வாழ்ந்த புகஹாக்கள் பலரை நான் சந்திக்கக் கிடைத்தது.அவா்கள் அனை வா்களும் குா்ஆனில் விளக்கம் கூறுவதை பெரும் பாவம் போல் கருது பவா்களாக இருந் தனா். இது போன்ற பல ஆதாரங்களை முன்வைத்து குா்ஆனில் சொந்த விளக்கம் கூறுவது கூடாது என வாதிடுகின்றனா்.

## த.்.ப்ஸீர் அர்ர.்.யை ஆதரிப்போா் முன்வைக்கும் ஆதாரங்கள்

இப்பிரிவினர் குா்ஆன், சுன்னா, பகுத்தறிவு ஆகியவற்றைக் கொண்டு தமது ஆதாரங்களை பின் வரு மாறு முன்வைக்கின்றனா்

1- அவா்கள் இந்தக் குா்ஆனை ஆராய்ந்து பாா்க்க வேண்டாமா? அல்லது அவா்களின் இருதயங்கள்(இருக்கின்றனவே)அவற்றின் மீது பூட்டுப்போடப்பட்டுவிட்டெனவா?(47-24)

2-(நபியே!) பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை அவா்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆய்வு செய்வதற்காகவும்,அறிவுடையோா் நல்லுணர்வு பெறுவதற்காகவும், உம்மீது அருளியுள்ளோம். (38-29)

3- அவா்கள் இந்த குா்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா? (இது)அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவா்கள் கண்டிருப்பாா்கள். (அந்நிஸா:-82) இந்த இறை வசனங்கள் இறை மறையினை ஆழ்ந்து படிக்கும்படி தூண்டுகின்றது. எனவே அதன்

கருத்துக்களை சிந்தனையின்றி விளங்குவது சாத்தியமற்றதாகும் என வாதிடுகின்றனர்.

4-அவர்கள் அதை (அல்லாஹ்வின்) தூதரிடமோ, அவா்களில் நின்றுமுள்ள அதிகாரிகளிடமோ தெரிவித்தால், அவா்களிலிருந்து அதை ஊகித்து அறியக்கூடியவா்கள் அதை விசாரித்தறிந்து கொள்வாா்கள்.(4-83)

இந்த வசனம் குா்ஆனில் சட்டத்தை ஆய்வு செய்வதை ஆதரிப்பதுடன், ஆய்வு செய்வதற்கான நிபந்தனைகள் அமையப் பெற்ற அறிஞா்கள் இங்கு காணப்படுவாா்கள் எனவும் அடித்துக் கூறுகின்றது என தமது வாதத்திற்கு வலுசோ்க்கின்றனா்.

-5- நபி (ஸல்) அவா்கள் இப்னு அப்பாஸ் (ரழி) அவா்களுக்காக"**அல்லாஹ்வே மாா்க்கத்திலும் குா்ஆனிலும் இவருக்கு விளக்கத்தையும் அளிப்பாயக"!** எனப்பிராா்த்தனை புரிந்தமை (அஹ்மத், இப்னு அபீஷைபா, இப்னு ச.்.த், அல்ஹாகிம், அத்தபரானி கபீர்)

---

1- المصدر السابق ص: 80-90

விளக்கம் என்பது காதால் கேட்டல், அறிவித்தல் ஆகியவற்றின் மீது மாத்திரம் தங்கியிருக்குமானால் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களுக்கு விளக்கத்தை கொடுக்குமாறு பிரார்த்தனையைக் குறிப்பிட்டுக் கூறுவதில் எவ்வித பயனும் இல்லை.ஆகவே இஜ்திஹாதும், விளக்கம் கூறுவதும் கூடுமான ஒன்று என்பதை இந்நிலை உணர்த்துவதாக வாதிடுகின்றனர்.

5-இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களாக குர்ஆன்,சுன்னா, இஜ்திஹாத்,அல்கியாஸ் ஆகியவை எடுத்துக் கொள்ளப்படும்.தப்ஸீர் அல்-ற.்.ய் கூடாது (தடை செய்யப்பட்டது) என்றால் இஜ்திஹாதும் தடை செய்யப்பட்டது எனப் பொருள் கொள்ள வேண்டுமே என்கின்றனர்.

## ஊர்ஜிதம் செய்யப்பட்ட கருத்து

மேற் கூறப்பட்ட ஒவ்வொரு பிரிவினது ஆதாரத்தையும் தனித் தனி நிலையின் மீது சுமத்தப்படும். கூடும் என வாதிட்ட பிரிவினர்களின் ஆதாரத்தை மு.்.பஸ்ஸிர் ஒருவிரிடம்__காணப்பட வேண்டிய நிபந்தனைகள் பூரணம் பெற்ற நிலையில் விளக்கம் கூறுவதையும், அல்லது குறித்த வசனத்திற்கு **த.்.ப்ஸீர்-ம.்.ஸூர்** மூலம் விளக்கப்படும் '**அர்ர.்.யுல் மஹ்மூத்**" (வரவேற்கப்பட முடியுமான கருத்து) வகையின் மீதும் சுமத்தியுள்ளனர்.

**கூடாது** என்று வாதிட்ட பிரிவினர்களின் ஆதாரத்தை மு.்.பஸ்ஸிரிடம் காணப்பட வேண்டிய நிபந்தனைகள் முழுமைபெறாத, ஆதாரதமற்ற செய்திகள் கொண்டு விளக்கப்படுகின்ற ‘‘**அர்ர.்.யுல் மத்மூம்**" வகையின் மீதும்,தனி மனித அபிப்பிராயத்திற்கு **முன்**னுரிமை வழங்கும் கருத்தின் மீதும் சுமத்தியுள்ளனர்.

## ‘‘த.்.ப்ஸீர்அர்ர.்.ய்’’ கூடாது என வாதித்த பிரிவினர்களுக்கெதிரான மறுப்பு:

நபியே ! நீர் உமக்கு அறிவற்ற விடயத்தில் தலையிடாதே... என்ற வசனத்தையும், ‘‘அல்லாஹ்வின் மீது அபாண்டமானவைகளைக் கூறுவதையும்..." என்ற வசனத்தையும் முன்வைப்போரின் கருத்துக்களின் **ஆதாரம் ஒன்று** "உறுதி செய்யப்பட்ட வகையைச் சேர்ந்ததாக இருக்கும். அல்லது ஊகத்தின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கும். அதே வேளை உறுதி செய்யப்பட்ட வகையைச் சோந்த ஆதாரம் கிடைக்கப் பெறாத நிலை உருவானால் ஊகத்தின் அடிப்படையில் அமைந்த ஆதாரத்தை தேடிச் செல்லும்- அதாவது குறித்த வசனத்திற்கு சாத்தியமான பொருளைத் தேடிச்செல்லும்- நிலை உருவாகும்.**ஆகவே** உறுதி செய்யப்பட்ட வகையைச் சேர்ந்த ஆதாரத்துடன் எவ்வித முரண்பாடும் இங்கு ஏற்படாததன் காரணமாக இறைவன் மீது அபாண்டமாகக் கூறுதல் இடம் பெறுவதற்கு வாய்ப்புண்டு எனச் சித்தரிப்பது அர்த்தமற்ற வாதமாகும். எனக்கூறி மறுக்கின்றனர்.

(நபியே)மனிதர்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும்... என்ற வசனத்தில் **தப்ஸீர் அல்-ற.்.ய்** கூடாது என வாதிடுவோர் "**தெளிவு படுத்துதல்** " என்பது நபி (ஸல்) அவர்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு கூறப்பட்டதாகும்.எனக் கூறுகின்றனர்.

**அதனை மறுத்துரைப்போர்:** நபி(ஸல்) அவர்கள் அல்-குர்ஆனிய வசனங்கள் அனைத்தையும் நபித் தோழர்களுக்கு விளக்கிக் கூறவில்லை எனவும், அவர்கள் எந்த வசனங்களைத் தெளிவு படுத்தினார்களோ அந்த விளக்கத்தின் மீது மாத்திரம் போதுமாக்கிக் கொள்ளப்படும். எவைகளைத் தெளிவுபடுத்த வில்லையோ அவைகளுக்கு 'இஜ்திஹாத்" மூலமான தீர்வைத் தவிர வேறு தீர்வில்லை எனவும் வாதிடுகின்றனர்.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் வழியாக அறிவிக்கப்படும் செய்திக்கு விளக்கமளிக்கும் இவர்கள்:- அந்தச் செய்தியினை இமாம்களான அஹ்மத்,அபூசுர்ஆ போன்றோர் பலவீனமாக் கியுள்ளதாகக் காரணம் முன் வைக்கின்றனர்.

வாதத்திற்காக அது 'ஸஹீஹான செய்திதான் என எடுத்துக் கொண்டால் அல்லாஹ் தனது அறிவுக்குள் கட்டுப்படுத்தியுள்ள மறைவான அம்சங்களையும், **'முதஷாபிஹாத்"** வசனங்களையும், மு.ஃ.பஸ்ஸிர் விளக்குவதைக் குறிக்கவும்.அல்லது குர்ஆனை ஆதாரம் எதுவுமின்றி மனோ இச்சையின் அடிப்படையில் விளக்குவதைக் குறிக்கவும், அல்லது மு.ஃ.பஸ்ஸிரிடம் காணப்பட வேண்டிய நிபந்தனைகள் பூரணமின்றி காணப்படும் நிலையில் குர்ஆன் விளக்கத்தைக் குறிக்கவும், இந்த எச்சரிக்கை கையாளப்படும் என விளக்கமளிக்கின்றனர்.

ஸஹாபாக்கள், தாபிஈன்கள், வழியாக அறிவிக்கப்படும் செய்திகளுக்கு விளக்கமளிக்கும் இவர்கள் பேணுதலை கடைப்பிடித்தல், தவறில் விழுவதை அஞ்சுதல்,ஆகிய காரணங்களுக்காக அவ்வாறு கூறியிருக்க முடியும் என்றும். கூடவே சரியான முடிவு எது என்ற தெளிவற்றநிலை காணப்படுதல், அல்லது தப்ஸீர் செய்யும், நிபந்தனைகள் பூரணம் பெறாத நிலையில் மு.ஃ.பஸ்ஸிரானவர் த.ஃ.ப்ஸீர் செய்கின்ற நிலையினைக் குறிக்கவும்,உபயோகிக்கப்படும் எனவும் கருத்துக் கூறுகின்றனர்.

## *த.ஃ.ப்ஸீரை சீரமைப்பதன் அவசியம்:*

இவ்வாறு பல்வேறு பட்ட போக்கினைக் கொண்டதாகக் காணப்படும் த.ஃ.ப்ஸீர் நூல்கள் துப்பரவு செய்யப்பட்டு பரிசுத்தப்படுத்தப்படுத்தப்படவேண்டிய தேவை அவசியமாகின்றது. இதனைக் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு அறிஞரும் அவரது த.ஃ.ப்ஸீரில் கடைப்பிடித்துள்ள வழிமுறை, அவர் எந்த சிந்தனையைப் பிரதிபலிப்பவராக இருந்தார் போன்ற அம்சங்கள் பற்றி விளக்குவது அவசியமானது. அத்துடன், ஒருவர் த.ஃ.ப்ஸீர் செய்வது எப்படி? அதன் அளவுகோல்கள் என்ன ? என்பன போன்ற அடிப்படையான விதிகளை விளக்குவதும் தேவையாக இருந்தது.

அத்துடன் அறிவியல்கள் துறையுடன் ஒட்டடியதாக நவீன காலத்தில் த.ஃ.ப்ஸீர் செய்யப்பட்டுள்ள த.ஃ.ப்ஸீர்கள் உலகியல் சிந்தகைளைச் சரிகாணவேண்டும், உலக மாற்றத்துடன் இஸ்லாமிய சிந்தனையும் மாற்றம் பெற வேண்டும் என்ற சிந்தனைப் பாங்கில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதும் அவசியமாகும்.

## நவீன காலத்தில் த.ஃப்ஸீர் அமையப் பெற முடியுமான அணுகுமுறைகள்.

ஆரம்ப காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் பெருமக்கள் அக்கால சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு தமது த.ஃப்ஸீர் நூல்களை வடிவமைத்தனர். பிற்காலத்தில் தோன்றிய அறிவியல் உண்மைகளை உள்ளடக்கிய அமைப்பில் அவர்கள் த.ஃப்ஸீர்களை எழுதும் அளவு அறிவிலும் வளர்ச்சியடைந்திருக்கவில்லை.

மனிதர்களின் வாழ்வியல் இலட்சியத்தை விளக்கும் புனிதமிக்க அல்குர்ஆன் தன்னை உலகப் பொதுமறை என்று அடையாளப்படுத்துவதனால் மனித இனம் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கும் அம்சங்களைத் தேர்ந்தெடுத்து நவீன முறையில் முன்வைக்கப்படுவது அது இறக்கப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்யலாம் என்ற கருத்தினைக் கொண்டு பின்வரும் அடிப்படைகளைக் கொண்டு அது அமையப் பெற்றால் அதன் நோக்கம் நிறைவேற வழியாகலாம். அந்த வகையில் பின்வரும் வழிமுறைகள் கருத்தாக முன்வைக்கப்படுகின்றது.

## அறிவியல் உண்மைகளை உள்ளடக்கியதாக அமைதல்

நவீன காலத்தில் விஞ்சான அறிவியல் மூலமான த.ஃப்ஸீரின் தேவை பற்றிப் பவரலாக பேசப்படுகின்றது. அல்குர்ஆன் வாழும் அற்புதம் என்ற வகையிலும், அது உலகம் அழியும் வரை பாதுகாக்கப்படும் பொதுமறை என்ற வகையிலும் மனிதகுலத்தின் வழிகாட்டி என்ற வகையிலும் அதில் புதைந்து காணப்படும் அறிவியல் அற்புதங்களைக் கொண்டு த.ஃப்ஸீர்கள் அறிஞர்களால் எழுதப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

நவீன காலத்தில் விஞ்சான அறிவியல் மூலமான த.ஃப்ஸீரின் தேவை பற்றிப் பவரலாக பேசப்படுகின்றது. அல்குர்ஆன் வாழும் அற்புதம் என்ற வகையிலும், அது உலகம் அழியும் வரை பாதுகாக்கப்படும் பொதுமறை என்ற வகையிலும் மனிதகுலத்தின் வழிகாட்டி என்ற வகையிலும் அதில் புதைந்து காணப்படும் அறிவியல் அற்புதங்களைக் கொண்டு த.ஃப்ஸீர்கள் அறிஞர்களால் எழுதப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அறிவியலைக் கொண்டு த.ஃப்ஸீரை விளக்கும் வழிமுறை இன்று நேற்று தோன்றியதல்ல. மாற்றமாக இமாம் கஸ்ஸலாலி போன்ற அறிஞர்கள் தமது கிரந்தங்களில் சுட்டிக்காட்டி இருப்பதைப் பாரக்கின்ற போது இந்த சிந்தனை ஹி: 500 களில் தோன்றியதாகவே கருத முடியும். இதே வழிமுறையை ஆரம்ப கால அறிஞர்களான அபூபக்கர் இப்னுல் அரபி, ஃபக்ருர்ராஸி, அபுல்.ஃபள்ல் முர்ஸீ, இருந்து அபூஇஸ்ஹாக் அஷ்ஷாதிபி போன்றோர் இதைக் கடுமையாக விமர்சித்துள்ளதை சுட்டிக்காட்ட வேண்டும். மாத்திரமின்றி, உஸ்மானியர் இஸ்லாமிய கிலா.ஃபத் பொறுப்பை ஏற்ற போது மார்க்கத்தில் புதிதாகக் கொண்டு வரப்பட்ட சிந்தனைகளை எதிர்த்தனர். அறிவியல் சார்ந்த அம்சங்களைக் கொண்டு அல்குர்ஆன் விளக்கம் அமைவதையும் கடுமையாக எதிர்த்தனர்.

எகிப்தின் மீது பிரான்ஸ் கி.பி. 1798- 1801- வரை ஆக்கிரிமித்ததைத் தொடர்ந்து எகிப்து மாணவர்கள் ஐரோப்பாவை நோக்கி கல்விப்பயணம் மேற்கொண்டனர். அவர்கள் அங்கிருந்து திரும்பி வந்த போது இஸ்லாத்தை பிற்போக்குவாத மார்க்கம் என விமர்சனம் செய்யத்தொடங்கினர். அவர்களிடம் காணப்பட்ட அறிவியல் கருத்துக்களை இஸ்லாமிய அறிஞர்கள் உள்வாங்கி அல்குர்ஆனிய வசனங்களுடன் அதன் உடன்பாடு பற்றி ஆய்வு செய்ததன் வெளிப்பாடாகவே அறிவியல் சார்ந்த கருத்துக்களைக் கொண்ட த.ஃப்ஸீர்கள் வெளிவரக் காணமானது.

கி.பி.1805ல் முஹம்மத் அலி பாஷா எகிப்தின் ஆட்சியாளராக இருந்த போது பலர் ஐரோப்பாவிற்கு சென்றிருந்தனர். அங்கு காணப்பட்ட அறிவியல்களை ரி.்.பாஆ அத்தஹ்தாவின் குழுவினர் ஐரோப்பாவில் இருந்து சுமந்து வந்த அறிவியல் உண்மைகள் பற்றி முஸ்லிம் அறிஞர்கள் ஆராய்ந்தனர். அக்காலத்தில் மனச் சோர்வு, அழுத்தம் போன்ற தாக்கத்திற்கு உள்ளாக்கட்டுக்கிடந்த முஸ்லிம்களுக்கு வலுவூட்டும் விதமாக இந்த அறிவியலை அறிஞர்கள் அல்குர்ஆனிய வசனங்களுடன் இணைத்து வழங்கினர். அந்த வகையில் பின்வரும் அறிஞர்கள் குறிப்பிட்டுக் கூறப்படுகின்றார்கள்.

| | எழுதிய நூல்கள் | மரணம் | பெயர் |
|---|---|---|---|
| | **كشف الأسرار النورانية القرآن فيما يتعلق بالأجرام السماوية والأرضية والحيوانات والنباتات والجواهر المعدنية** | **1306هـ / 1889 م** | **الطبيب محمد بن أحمد الإسكندراني** |
| | **كتابات ومقالات** | **1315هـ / 1897م** | **جمال الدين الأفغاني** |
| **(( شمس العلوم وكنز الحكم ))** | **(( طبائع الاستبداد ومصارع الاستعباد ))** | **1320هـ/1902م** | **عبدالرحمن الكواكبي** |
| | | **1323هـ /1905م** | **الشيخ محمد عبده** |
| | **(( إعجاز القرآن والبلاغة النبوية ))** | **1356 هـ/ 1937م** | **مصطفى صادق الرافعي** |
| | **(( في ظلال القرآن ))** | **- 1906 - 1966** | **سيد قطب** |
| **في العصر الحديث** | **(( الجواهر في تفسير القرآن الكريم ))** | **1359هـ/ 1940 م** | **طنطاوي جوهري** |
| ***இவர்கள் இந்த வரிசையில் கூப்படுகின்றார்கள்*** | | | **الشيخ محمد شلتوت ، وأمين الخولى ومحمد رشيد رضا ، ومحمد حسين الذهبي ،وعبد المجيد الزنداني** |

அமீன் ஷன்கீதி (ரஹ்) அவர்கள் விஞ்ஞான அறிவியல் உண்மைகளைக் கொண்டு அல்குர்ஆனை அணுகுவதன் அவசியம் பற்றிக் குறிப்பிடுகின்ற போது இவ்வாறு விளக்கம் தருகின்றார்கள்.

**[الحجر: 17]** **{وَحَفِظْنَاهَا مِنْ كُلِّ شَيْطَانٍ رَجِيمٍ}** அவைகளை (நச்சத்திரங்களை) ஒவ்வொரு ஷைதான்களில் இருந்தும் நாம் பாதுகாத்தோம் (அல்ஹிஜ்ர்: 17) என்ற திருக்குர்ஆன் வசனத்தை ஒருமனிதனுக்கு அல்லாஹ் அவனது வேதத்தில் வழங்கிய அறிவு என விஷேடமான மூன்று அம்சங்களில் ஒன்று அலி (ரழி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறிய செய்தியை அடிப்படையாகக் கொண்டு விளக்கும் அல்லாமா ஷன்கீதி (ரஹ்) அவர்கள் மனிதர்களிடம் முன்பு காணப்படாத பல புதிய அறிவியல்கள் உண்மைகள் பிற்காலத்தில் புதிதாகத் தோன்றலாம், ஒரு வசனம் பல சரியான கருத்துக்களை உள்ளடக்கிக் கொள்வதில் மார்க்கத்தில் எவ்வித ஆட்சேபனையும் கிடையாது எனக் குறிப்பிட்டுள்ளார்கள். (1)

-------------------------------

1- (4 / 5) – التفسير والمفسرون للذهبي -1

## அல்குர்ஆனை அறிவியல் கண்டுபிடிப்புக்களுடன் விளக்குவதன் நன்மைகள்

அல்குர்ஆன், அறிவியலை அம்சங்களை ஆர்வப்படுத்தி, ஆராய்ச்சியைத் தூண்டுகின்ற மாரக்கம் என்பதால் அதில் காணப்படும் அறிவியல் தொடர்பான பொக்கிஷங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு நவீன அறிவியல் கண்டு பிடிப்புக்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு முன்வைக்கப்படுகின்ற போது விஞ்ஞானிகள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் அதன் பக்கம் ஈர்க்கப்படுவது அதிகரிக்கும்.

அல்குர்ஆனைத் சொந்தமாக ஆராய்ந்து படித்து அதன் பக்கம் ஈர்க்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்ற இந்நிலையில் அதன் அறிவியல்கள் உலகுக்கு தெளிவாக எடுத்துக் கூறப்படும் போது நிச்சயமாக அதன் பக்கம் தமது கவனத்தை திருப்பவே செய்வாரகள்.

மாரிஸ் புகைல், அப்துல்லாஹ் எலிஸன், யூசு.ஃப் இஸ்லாம், பிலால்பிலிப்ஸ், அப்துர்ரஹீம் கிரீன், யூசு.ஃப் எஸ்டஸ், கெப்ரீல், டாக்டர் கீத்மூர் போன்றோர் சில தசாப்தங்களுக்கு முன்னால் இஸ்லாத்தில் இணைத்தனர்.

சமீபத்தில் கருவியல் விஞ்ஞானியான யூத இனத்தைச் சேர்ந்த ரொபர்ட்கேல்ஹிம் தலாக் சொல்லப்பட்ட பெண் மூன்று மாதங் காலம்வரை மறுமணத்திற்காக காத்திருப்பதன் இரகசியம் பற்றிய மரபணுஓ தொடர்பான உண்மை விளக்கப்பட்டுள்ளதாக் கூறி இஸ்லாத்தில் இணைந்தார்.

அல்குர்ஆனில் மாத்திரம் இந்த அறிவியல் உண்மைகள் காணப்படவில்லை. மாற்றமாக அல்லாஹ்வின் தூதரின் பொன்மொழிகளிலும் காணப்படுகின்றன. அவற்றையும் இணைத்து நோக்குவது அல்குர்ஆன் பற்றியும், முஹம்மத் நபி பற்றியும் அவர்கள் கொண்டு வந்த மாரக்கத்தின் அற்புதத்தன்மை பற்றியும் அறிய வழி செய்யும்.

## நவீன காலத்துடன் தொடர்பான சமூகவியல் பிரச்சினைகளை அறிவியல் ரீதியாக முன்வைத்தல்

இந்தப் பகுதியும் அல்குர்ஆனின் விரிவுரைகளில் உள்ளடக்கப்பட முடியுமானதாகும். தற்காலத்தில் இஸ்லாத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அதன் சட்டவாக்கம், குற்றவியல் சட்டங்கள், இறையியற் தன்மை, மறுமை நம்பிக்கை, பொருளியல், வட்டி தொடர்பான அம்சங்களை விளக்குவதாக அமைதல். அத்துடன், இஸ்லாமி ஆடைமுறை, மற்றும் அதன் ஒழுக்கவியல் தொடர்பான அம்சங்களில் சமூகச் சீரழிவை உண்டாக்கும் காரணிகளை விளக்குதல் போன்ற அணுகுமுறை.

## அறிவியல் துறையை இணைத்து த.ஃப்ஸீர் செய்வதன் அவசியம்

அறிவியல் உண்மைகளை வெளிக் கொணர்வதில் ஈடுபாடு காட்டி, குர்ஆனில் காணப்படும் அறிவியல் சாா்ந்த கலைச் சொற்களை தெளிவு படுத்தும் கலைக்கே 'அத்தப்ஸீர்அல் இல்மி" எனக் கூறப்படும். இது பற்றி விபரம் முன்னர் தரப்பட்டுள்ளது.

### அறிவியல் கோணத்தில் அணுகுவதற்கான காரணி

இத்துறையில் த.ஃப்ஸீர் எழுதுவோர் குர்ஆன் தன்னில் சகலவிதமான அறிவு ஞானங்களையும் உள்ளடக்கிப் பரிணமிப்பதை காரணமாகக் கூறி இவ்வாறு அணுகுகின்றனா். இது விடயத்தில் அறிஞா்கள் இரு பிரிவினா்களாக இருக்கின்றனா்

**முதலாவது பிரிவினர்:** ஆதரவான கருத்தைக் கொண்டோர். இப்பிரிவினா் தமது கூற்றிற்கு ஆதாரமாக பின் வரும் ஆதாரங்களை சமா்ப்பிக்கின்றனா்.

1-உலகின் பல கோணங்களிலும், குா்ஆனிலும், சிந்திக்குமாறும், ஆய்வு செய்யுமாறும் கட்டளை பிறப்பிக்கின்ற வசனங்கள்.

2-குர்ஆன் வாழ்வின் சகல பகுதிகளையும் பொதிந்திருப்பதுடன், அது தன்னில் அனைத்து ஞானங்களையும் உள்ளடக்கி உள்ளது என்ற வாதம்.

நாம் பதிவுப்புத்தகத்தில் எந்த ஒரு அம்சத்தையும் குறிப்பிடாமல் விட்டு விடவில்லை. (அல் அன் ஆம்:38) என்ற திருமவைசனத்தையும், விரைவில் பல குழப்பங்கள் தோன்றும் என நபி (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்த போது, அல்லாஹ்வின் தூதரே அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழி என்ன? என நபித் தோழர்கள் வினார்கள், அல்லாஹ்வின் வேதத்தைப் பற்றிக் கொள்ளுங்கள், அதில் உங்களுக்கு முன்னுள்ளோர்களின் செய்தியும், உங்களுக்குப் பின்னுள்ளோர்களின் செய்தியும் உண்டு. என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்த நபிமொழியினையும் ஆதாரமாக முன்வைக்கின்றனர்.

***இரண்டாம் பிரிவினர்: அறிவியல் சார்ந்த சார்ந்த விரிவுரையினை மறுத்துரைப்போர்***

முதலாம் பிரிவினரின் ஆதாரங்களை மறுத்துரைக்க முற்படும் இவர்கள் அல்குர்ஆன் மனித நேர்வழிக்காக இறக்கியருளப்பட்டதாகவும், அதிலுள்ள அறிவியல் உண்மைகள் உபதேசத்திற்காகவும், படிப்பினைக்காகவுமே இறக்கியருளப்பட்டதாகவும் வாதிடுவதோடு, அதுவே இலக்காகக் கொள்ளப்படவில்லை. எனவும் குறிப்பிடுகின்றனர்.

**ஊர்ஜிதம் செய்யப்பட்ட கருத்து:**

அல்குர்ஆனில் அறிவியல் உண்மைகள் காணப்படுவதில் எவ்விதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் அக்கோட்பாட்டில் உறுதியான நிலைப்பாடின்றி அதில் அறிவியல் கோட்பாடுகளைத் திணிக்க முயல்வது எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. ஏனெனில் உலகில் முன்வைக்கப்பட்ட பல அறிவியல் கோட்பாடுகள் காலப் போக்கில் தோல்வியைத் தழுவியிருப்பதை நாம் அறிந்ததே!

## ***அல்குர்ஆனை விளக்குவோரிடம் காணப்படவேண்டிய அடிப்படை அறிவுகள்***

***ஷரீஆவின்*** சான்றுகைள அணுகும் வழிமுறைகள் பற்றிய விதிகளை சட்டக்கலை அறிஞர்கள் பின்வரும் அடிப்படையான அம்சங்களைக் கொண்டு அணுகுவதுண்டு. அந்த வகையில் அல்குர்ஆனை விளக்க முற்படுவோரும் வேண்டப்படுவர்.

1- நஸ் (நேரடியான சான்று) பற்றிய அறிவு, முக்கியத்துவம்.
2- ஸபபுன்னுஸுல், பயன்பாடு, முக்கியத்துவம்,
3- நாஸிஹ் மன்சூஹ் பற்றிய அறிவு,
4- ஒரு வசனத்தின் வரலாறு, சமூகவியல், பற்றிய பின்னணி,
5- மக்கி, மதனி,
6- முத்லக், முகய்யத் (ஆம், ஹாஸ்),
7- அரபி மொழி அறிவு,
8- முஹ்கம், முதஷாபிஹ்

போன்ற அடிப்படைகள் பற்றிய விதிகளை அல்குர்ஆனை விரிவுரை செய்வோர் பொதுவாக அறிந்திருப்பது அவசியமாகும்.

## த.்.ப்ஸீர் துறையில் முக்கிய சில முன்னோடிகள்

அல்குர்ஆனை விளக்கும் பணிகளில் அறிஞர்கள் பலர் ஈடுபாடு காட்டினர். அந்தப் பெருந்தகைகள் பற்றிய விபரம் இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றது.

| م | اسم الكتاب | اسم المؤلف | الولادة / الوفاة | الملاحظة |
|---|---|---|---|---|
| **1** | **جامع البيان فى تفسير القرآن (للطبرى)** | أبو جعفر، محمد بن جرير بن يزيد بن كثير ابن غالب الطبرى الإمام الجليل | 236 هـ<br>ت 310هـ | **يدعى ب "أبو التفسير" وتفسيره ب "أم التفاسر"**<br>**تفسير محمد بن جرير - أجَّل التفاسير وأعظمها، فإنه يتعرض لتوجيه الأقوال، وترجيح بعضها على بعض، والإعراب، والاستنباط، فهو يفوق بذلك على تفاسير الأقدمين". (السيوطي)**<br>**"أجمعت الأُمة على أنه لم يُصنَّف مثل تفسير الطبرى" (النووى)**<br>**التفسير والمفسرون للذهبي - (4 / 24)** |
| 2 | **بحر العلوم (للسمرقندى)** | أبو الليث، نصر بن محمد بن إبراهيم السمرقندى الفقيه الحنفى، المعروف بإمام الهدى | المتوفى سنة **373** هـ | جمع فيه صاحبه بين التفسير بالرواية والتفسير بالدراية إلا أنه غلَّب الجانب النقلى فيه على الجانب العقلى (التفسير والمفسرون للذهبي - (4 / 31) |
| 3 | **الكشف والبيان عن تفسير القرآن (للثعلبى)** | أبو إسحاق أحمد بن إبراهيم الثعلبى النيسابورى المقرئ، المفسِّر، كان حافظاً واعظاً، رأساً فى التفسير والعربية | سنة **427** هـ | يتوسع فى الكلام عن الأحكام الفقهية عندما يتناول من آيات الأحكام، فتراه يذكر الأقوال والخلافات والأدلة ويعرض للمسألة من جميع نواحيها، التفسير والمفسرون للذهبي - (4 / 33)<br>وقال الكتانى فى الرسالة المستطرفة عند الكلام عن الواحدى المفسِّر: "ولم يكن له ولا لشيخة الثعلبى كبير بضاعة فى الحديث، بل فى تفسيرهما - وخصوصاً الثعلبى - أحاديث موضوعة وقصص باطلة |

| م | اسم الكتاب | المؤلف | الولادة/ الوفاة | الملاحظة |
| --- | --- | --- | --- | --- |
| 4 | معالم التنزيل (للبغوى) | أبو محمد، الحسين بن مسعود بن محمد المعروف بالفرَّاء البغوى، الفقيه، الشافعى، المحدِّث، المفسِّر، الملقَّب بمحيى السُّنَّة وركن الدين | المتوفى سنة :510هـ | وهو كتاب متوسط، نقل فيه عن مفسِّرى الصحابة والتابعين ومَن بعدهم التفسير والمفسرون للذهبي (4 / 34) |
| 5 | المحرر الوجيز فى تفسير الكتاب العزيز (لابن عطية) | أبو محمد عبد الحق بن غالب بن عطية الأندلسى المغربى الغرناطى الحافظ القاضى | ولد سنة481هـ ت سنة586 هـ | أجَّل مَنْ صنَّف فى علم التفسير، وأفضل مَنْ تعرَّض فيه للتنقيح والتحرير (وصف أبي حيان الأندلسي) التفسير والمفسرون للذهبي - (4 / 35) |
| 6 | تفسير القرآن العظيم | هو الإمام الجليل الحافظ، عماد الدين، أبو الفداء، إسماعيل بن عمرو بن كثير من ضوء بن كثير بن زرع البصرى ثم الدمشقى، الفقيه الشافعى | المولود سنة 700 هـ والمتوفى سنة 774هـ | الإمام المفتى، المحدِّث البارع، فقيه متفنن، مُحَدِّث متقن، مُفَسِّر نقَّال، وله تصانيف مفيدة (الذهبي ) |
| 7 | الجامع لأحكام القرآن - لأبى عبد الله القرطبى (المالكى) | هو الإمام أبو عبد الله محمد بن أحمد بن أبى بكر ابن فرْح - بإسكان الراء والحاء المهملة - الأنصارى، الخزرجى، الأندلسى، القرطبى المفسِّر | تُوفى سنة 671 هـ | هو من أجَلِّ التفاسير وأعظمها نفعاً، أسقط منه القصص والتواريخ، وأثبت عوضها أحكام القرآن واستنباط الأدلة، وذكر القراءات والإعراب والناسخ والمنسوخ (العلامة ابن فرحون) التفسير والمفسرون للذهبي - (4 / 373) |
| 9 | أحكام القرآن للجصاص الحنفي | أبو بكر، أحمد بن علىّ الرازى، المشهور بالجصَّاص | المولودسنة 305 هـ المتوفى سنة: 370 هـ | متأثر بالمعتزلة وعقائدهم |
| 8 | الجواهر الحسان فى تفسير القرآن (للثعالبى) | أبو زيد عبد الرحمن بن محمد بن مخلوف الثعالبى، الجزائرى، المغربى | المتوفى سنة876 هـ | أن الكتاب عبارة عن مختصر لتفسير ابن عطية، مع زيادة نُقُول نقلها الثعالبى عمَّن سبقه من المفسِّرين |

| | | | | |
|---|---|---|---|---|
| تفسير ألف في الرأي ولكن المؤلف لم يكمله | المولود سنة 544هــ المتوفى سنة606هــ | هو أبو عبد الله، محمد بن عمر بن الحسين بن الحسن ابن علىّ، التميمى، البكرى، الطبرستانى، الرازى، الملقَّب بفخر الدين، والمعروف بابن الخطيب الشافعى، | مفاتيح الغيب للرازي | 9 |
| أشعري المسلك يقال: إنه أكثر في الأخذ من الكشاف | المتوفى سنة 685 هــ | هو القاضي ناصر الدين ابوالخير, عبدالله بن عمر بن محمد بن علي , البيضاوي الشافعي , نسبة الى بيضا, مدينة كانت مشهورة بفارس | تفسير البيضاوي (أنوار التنزيل و اسرار التاويل | 10 |
| من المتأثرين بالمعتزلة | المتوفى سنة 701 هـ | أبو البركات ، عبدالله بن احمد بن محمود النسفي , نسبة الى ((نسف )) من بلاد ماورا النهر | تفسير النسفي (مدارك التنزيل و حقائق التاويل | 11 |

இவ்வாறு பல கலைகளையும், துறைகளையும், கொள்கைகளையும் உள்ளடக்கியதாக த.்.ப்ஸீர்கள் எழுதப்பட்டிருப்பதை அவதானிக்கின்றோம். மாதிரிக்காவே மேற்படி த.்.ப்ஸீர்கள் தரப்பட்டன.

## உஸாத்துணைகள்


1- د. محمد حسين الذهبى التفسير والمفسرون - (من المكتبة الشاملة)

2- الزركشي : البرهان في علوم القرآن (من المكتبة الشاملة )

3- السيوطي / الاتقان فب علوم القرآن

4- د: مساعد الطيار ، بحوث في التفسير ومناهجه

5- أبو جعفر الطحاوي ، شرح الطحاوية – ط دار السلام

6- الإسرائيليات والموضوعات فى كتب التفسير

7- د/ مساعد الطيار، بحوث في التفسير

الدكتور / خالد العميري ، مذكرة التفسير للمستوى الثالث ، مكتب نوعية الجاليات بالجبيل بالمملكة العرب

இணையத்தளங்கள்

8- http://www.alukah.net/Sharia/0/352/#ixzz2HunMZyYd
9- موسوعة الاعجاز_في القرآن_العلمي_والسنة http://quran-m.com/]
10- موقع الشيخ الدكتور مساعد بن سليمان الطيار http://www.attyyar.net/
11- http://islamtoday.net/bohooth/artshow-86-1141.htm
12- www.dorar.net. موقع الدرر السنية


## ஆய்வுக்கட்டுரைகள்- சஞ்சிகைகள்


1- الجامعة الإسلامية ، مجلة البحوث الإسلامية



Visit www.islamkalvi.com for more books

## முடிவுரை

இறைவேதங்களின் வரிசையில் இறுதிவேதமாக அருளப்பட்ட அல்குர்ஆன் அல்லாஹ்வின் யதார்த்தமான பேச்சாகும். அது எழுத்தறிவு, வாசிப்பு அறிவு அற்றவராகக் காணப்பட்ட ஒழுக்க சீலர் என அச்சமூகதத்தவரால் போற்றப்பட்ட முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீது 23 ஆண்டுகள் பல சந்தர்ப்பங்களில் அருளப்பட்டதாகும்.

அவ்வேதம் அருளப் பெறும் போதும் சரி, அதற்குப் பின்னரும் சரி, நவீன காலத்திலும் சரி பல சவால்களை அது எதிர் கொண்டது. அதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அவ்வப்போது முறியடிக்கப்பட்டது.

அது தனது அசுர வளர்ச்சியில், பிறரை தன்பக்கம் ஈர்க்கும் அதன் தனித்தன்மையில் என்றும் அது ஓய்ந்ததில்லை. மாத்திரமின்றி, அது ஆல விருட்சமாய் வளர்கின்றதே அன்றி அது களைத்துப்போய் பெருமூச்சு விடவும் இல்லை.

அல்குர்ஆன் இறங்கிய காலம் முதல் அதற்கான பணிகள் காலத்திற்கு ஏற்ப அர்த்தமுள்ளதாக நடைபெற்றன. அது நபிகள் நாயகத்தின் மீது இறங்கிய போது மணனம், விளங்குதல், சந்தேகங்களை கேட்டறிதல், முரண்பாடுகள் போன்று தெரிவதை விளக்குதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

காலத்துக்கு காலம் புதிதுபுதிதாக தோன்றும் பிரச்சனைகளுக்கு பதில் அளிக்க முடியாமல் திணறினர். தமது சிந்தனைகளை ஒரு மத்ஹப் மீது உறைய வைத்ததனால் இந்நிலை ஏற்பட்டது. குர்ஆனுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிப்பதன் மூலம் முஸ்லிம்களுக்குத் தெளிவையும், எதிரிகளுக்கான பதிலையும் அளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

குர்ஆனின் நம்பகத்தன்மையை நிரூபிப்பதில் குர்ஆனில் இடம் பெறும் அறிவியல் உண்மைகள் ஒன்று திரட்டப்பட்டு அறிவுக்குப் பொருத்தமான முறையில் முன்வைக்கப்படுகின்ற போது அதன் மதிப்பும் உயரும். அந்தக்குறை பல அறிஞர் பெருமக்களால் நிவர்த்தி செய்யப்பட்டிருப்பினும் அதன் பரவலாக்கல் விஷயத்தில் முஸ்லிம்களிடம் கவனக் குறைவு இன்றும் இருக்கவே செய்கின்றது. அது நீக்கப்படுமானால் நிச்சமயாக அல்குர்ஆன் அருளப்பட்டதன் நோக்கம் நிறைவேறும் என்ற எண்ணம் நமக்குண்டு.

அல்லாஹ் நமது பணிகளை அங்கீகரித்து அருள் செய்வதோடு, எமது கல்விக்காக உழைத்த கல்விமான்கள், விரிவரையாளர்களின் வாழ்வில் அருட்பாக்கியங்களை நிரப்பமாகத் தருவானாக என்றும் பிரார்த்தனை செய்தவானாக!

**இவ்வண்ணம்:**

*எம்.ஜே. எம். ரிஸ்வான்*

***பதிவு இலக்கம்:*** HD/ MA/ 08-09-/559